# திராவிடநாடு

31-7-60 | வார வெளியீடு | விலை 16 காசு


## "தமிழ் காப்போம்"

—[ நா. வே. அப்பாராசு ]—

இத்தனைநாள் பொறுத்திருந்து பார்த்த தற்கு
ஏமாளி யென்றுநமை நினைத்து விட்டால்;
வித்தகராம் இந்நாட்டின் முதல்வர் சொல்லை
வீதியிலே யெறிந்துவிட்டு வளமை யற்ற
சொத்தைமொழி இந்திக்கு வரிந்து கட்டிச்
சுதிபாடக் கிளம்பிவிட்டார் பாபு ஐயா!
முத்தான நம்மொழியும் அழிந்த பின்பு
மூச்சுண்டோ? பேச்சுண்டோ? தமிழில் தம்பி

அஞ்சலட்டை தாள்கூடு செப்புக் காசு
அடுத்துள்ள மைல்கற்கள் நிலையம்; மேலும்
நஞ்சொத்த வானொலியும் நல்லார் செய்த
நற்பணியால் கலையிழந்து தமிழி ழந்து
துஞ்சாது துஞ்சுகின்ற காட்சி கண்டுன்
துடுக்குதனை—உணர்ச்சிதனை—மானந்தன்னை
செஞ்சாந்து பூசிவிட்டிருப்பா யென்று
சிறிதேனும் நினைக்கவில்லை ஐயோ தம்பி!

அங்காடிக் கூட்டமென வந்து நம்மை
அடிவயிற்றில் அடித்தார்கள்; ஆள வந்தார்
வங்காளக் கரைகளெலாம் வளம்கொ ழிக்க
வரும்பொருளில் பெரும்பாதி செலவ ழித்தார்;
சுங்கமெனத் திரளாகத் தென்ன கத்தை
சுரண்டிவிட்டார் போகட்டு மென்றி ருந்தோம்;
மங்காத இலக்கியத்தில் அகம்பு றத்தில்
மண்டைதனில் அடிப்பதற்கும் துணிவோ தம்பி?

சிங்கத்தில் பாயாத வகையும் உண்டோ?
செங்கடலில் பொங்காத அலையும் உண்டோ?
தங்கத்தில் புடம்போட்ட தமிழ் மக்கள்
தலைநிமிர்ந்த நல்லணியில் கோழை உண்டோ?
திங்களது "ஆகஸ்ட்டு" வரைக்கும் நிற்போம்
திருந்துதற்கு வாய்ப்பளிப்போம்; தவறின் தம்பி
சங்கெடுத்து ஊதிடுவோம் முரசு கொட்டி
சமர்தொடுப்போம் வெற்றியிலே தமிழைக் காப்போம்.

# புதுப் புடவை

—[புலவர்—பொன்னிவளவன்]—

பூமிக்குப் பாரமாகப் பிறந்து விட்ட மனித இனங்களைப் புகை விட்டபடி ஏற்றிச் சென்று இறங்க வேண்டிய இடத்தில் இறக்கிவிடு கின்ற புகைவண்டி, நிலையத்தை விட்டுப் புறப்பட்டது. கொஞ்ச நேரத்திற்கெல்லாம் கிடைத்த கூலியைப் பெற்றுக்கொண்டு மாணிக்கம் மாமரத்தடிப் பெஞ்சிலே வந்து குந்தினான். அவன் ஒரு இரயில்வே போர்ட்டர்.

"அண்ணே! கொஞ்சம் நெருப்புத் தாரீங்களா?" எதிரில் இருந்த ஆள் தன் பீடியில் குடிகொண்டிருந்த அக்னி பகவானை அவனிடத்தில் ஒப்படைத்தார். காதிலே இருந்த துண்டுப் பீடியை எடுத்து மாணிக்கம் பற்ற வைத்து ஒரு இழுப்பு இழுத்தான். நாவல் பழ நிறத்தோடு பிறந்துவிட்ட ஒருத்தியின் மூக்கிலே கிடக்கிற சிவப்பு மூக்குத்தி பிரகாசிக்கிற மாதிரி பீடியின் வெளிச்சம் பிரகாசித்தது.

"மலை நடந்து வர்ற மாதிரி வர்றானே மனுசன். அவன்தான் பாரம்னு அவன் கையிலே இருக்கிற பாரம் அவனைவிட இரண்டு மடங்கு இருக்கும் போலேருக்கே! அஞ்சு ஆறணாவாவது கூலி கிடைக்கும்னு, அந்த ஆளு இரண்டணாவ எடுத்துக் கொடுத்து இவ்வளவுதான் போடாங்கிறான். இவ்வளவுதானா என்று கேட்டால் அடிக்க வர்ரான். என்ன உலகமய்யா இது!" மாணிக்கம் வாய் விட்டு அலுத்துக்கொண்டான்.

"என்னப்பா! சின்ன ஸ்டேசனைத் தானே இருக்கு? இங்கே உனக்கு என்ன கூலி கிடைக்கும்? உலகத்தைக் குறைபட்டுக்கிறே. உலகத்தைச் சொல்லி என்ன பண்றது? எல்லாம் அவன் அவன் தலையெழுத்துப்படிதானே நடக்கும்?" என்றார் எதிரில் இருந்த மனிதர்.

"நீங்க வேறே, ஏங்க வயித்தெரிச்சலைக் கிளப்புறிங்க? தலையெழுத்தாவது? தெருப்புழுதியாவது? கையாலே எழுதுறதுதான் கையெழுத்து. என்னமோ அந்தக் காலத்துல தலையால எழுதிக் காலாலே படிச்சு வயிற்றாலே ஒப்பிச்ச மாதிரி எவனோ ஒரு மடையன் தலையெழுத்துன்னுட்டுப் போனான். அதை இந்தக் காலத்து அறிவாளிக் குஞ்சுங்க அப்படியே திருப்பிச் சொல்லிக்கிட்டுத் திரியுதுங்க. நீங்க சொன்னதுபோல ஸ்டேஷன் சின்னதுதான். என்னங்க பண்றது? மணி இப்ப பன்னிரண்டு ஆகுதுங்களா? காலையிலே அஞ்சரை மணி வண்டிக்கு வந்தவன். இப்படி இராத்திரி பன்னிரண்டு மணி வரைக்கும் குந்தியிருந்து என்னத்தை மூடிஞ்சுக்கிட்டுப் போறேன்! பாருங்க பன்னிரண்டணா! இந்த மாதிரிப் பெரிய மனுசனுங்க ஓட்டலில் போயி சாப்பிடுறாங்க. ஒரு ரூபாய்க்குச் சாப்பிட்டிருந்தா ஒன்னரை ரூபா பில் போடுறான். எப்படியப்பா கணக்கு! என்னா சங்கதின்னு விசாரிச்சா- தங்க கௌரவம் போயிடுமோன்னு கவலைப்பட்டுச் சத்தம் போடாம காசைக் கொடுத்துட்டு வர்றாங்க. இந்த மாதிரி கௌரவம் பார்க்கிற கௌரவ புத்திரருங்கதான் என்னைப்போல இருக்கிற ஏழைங்களுக்கு எட்டணா கொடுக்கவேண்டிய இடத்துல இரண்டணாக்கொடுக்கிறாங்க. மனுசன்னு பொறந்தா மனசிலே ஈவு இரக்கம் இருக்கணுங்க. வேறு என்ன வாரிக்கிட்டு போகப்போறோம். அது தொலையுது. நீங்க எங்கே போறீங்க?"

"பக்கத்து ஸ்டேஷனுக்குத்தான் போகணும், பாட்டுக் கச்சேரிக்குப் போனேன். நேரம் போனது தெரியலை. இரயில் போயிடுச்சு?"

இரயில் போனா போகுதுங்க. இந்த இரயில் போனா அடுத்த இரயில் இருக்கு. பாட்டுக் கச்சேரி அப்படி முடியுங்களா? இன்னைக்கு விட்டா நாளைக்குக் கேட்கவா முடியும்? உலகத்துக்கே இப்ப கச்சேரி தானுங்களே முக்கியம்? கச்சேரி எப்படியிருந்துதுங்க?"

"ரொம்ப ரொம்பப் பிரமாதம்! எள் போட்டா எள் விழாத அளவு மக்கள் நெரிசல்! வாயில ஈ நுழையறது தெரியாமலே அவ்வளவு ஆர்வமா கேட்டாங்க. சும்மா சொல்லப்படாது, பாடின பொண்ணும் ரொம்ப அருமையாப் பாடிச்சு.

போகுது! கல்யாண வீட்டிலே வைக்கிற கச்சேரியில், போயும் போயும் வாயில ஈதானா நுழையணும்? ஒரு குலோப்ஜான், ஜிலேபி, ஜாங்ரி, இப்படி ஏதாச்சும் நுழையக் கூடாதா? ரொம்ப நாளாக் கல்யாண வீட்டுக்காரன் கரையாமல் வச்சிருந்த காசில கொஞ்சம் இன்னக்கிக் கரைஞ்சிருச்சு. நல்லதுதான். இந்தக் காலத்திலே என்னுங்க? யாராவது எழுதிக் கொடுக்கிற வசனத்தை பனைய பாடம் பண்ணி ஒப்புச்சுக்கிட்டு பௌடரும் அரிதாரமும் பூசிக்கிட்டு இப்படியும் அப்படியும் ஓடி ஆடி வளைஞ்சு நெளிஞ்சு நிமிர்ந்தா அதற்குப் பேரு நடிப்பு. அவள்தான் நடிகை. தனக்கு இருக்கிற தொண்டையைத் திறந்து உரத்த குரலில் சத்தம் போட்டு நாலு கீர்த்தனை, பதினேழு சினிமாப்பாட்டுப் பாடினா அதற்குப் பேரு சங்கீதம். அவ பேரு பாடகி! இப்ப எல்லாம் பொம்பளைங்க சாரீரத்தை வச்சுத்தானே பிசினஸ்பண்ண ஆரம்பிச்சுட்டாங்க. அதுங்களைப் பார்த்துட்டுவீட்டுலே இருக்கிற பெண்டுகளும் சாணி தெளிச்சுப் போட்டுக்கிட்டே சரிகம பதநிச பாடுதுங்க. சமையல் கட்டிலேயே டான்ஸ் ஆடுதுங்க. உல

கம் எங்கே உருப்படறது? அது சரிங்க. நான் வர்றேங்க!''

* * *

மாணிக்கத்தின் கால்கள் தரையில் பதிந்து பதிந்து எழுந்துகொண்டிருந்த நேரம், அவனுடைய கூரை வீட்டில் குந்தியிருந்த மனைவி மருதாயியின் மனதில், புதைந்துகிடந்திருந்த ஆசை நினைவுகள், காலைநேரத்தில் கழுத்துமணி அசைய மேய்ச்சலுக்குப் புறப்படுகிற மாடுகளைப்போலப் புறப்பட்டுக்கொண்டிருந்தன. 'ஏழையாகப் பிறந்துவிட்ட காரணத்தால் இதயத்தில் எழுகின்ற எண்ண அலைகளை எடுத்தெறிந்துவிடத்தான் வேண்டுமா? எப்படி எடுப்பது? எங்கே எறிவது? எதற்காக எறிவது? நினைக்கக்கூடக் கூடாது என்பதிலே என்ன நியாயமிருக்கிறது? நான் நினைக்கத்தான் நினைப்பேன்; அதனாலே கவலை தோன்றும்; பரவாயில்லை! கவலையைக் கண்ணீரால் குளிப்பாட்டுகிறேன்.' மருதாயியின் வாய் பேசவில்லை. ஆனால் சிந்தை செயலாற்றிக்கொண்டிருந்தது. செத்துப்போன பிரேதசங்களுக்கு வேண்டுமானால் கவலை இல்லாமல் இருக்கலாம். ஆனால் செத்தும் சாகாமலிருக்கிற சடலங்களுக்குக் கவலையையும் கண்ணீரையும் தவிர வேறு நெருங்கிய சொந்தம் என்ன இருக்கிறது?

'கிழிந்த புடவையைக் களைந்துவிட்டு வேறு நல்ல புடவை கட்டிக்கொள்ள எனக்குவழியிருக்கிறதா?' ஒட்டுத் தையல்களால்தான் நான் உயிர்வாழ்ந்துகொண்டிருக்கிறேன் என்று சொல்லாமல் சொல்லிக்கொண்டிருந்த தன்னுடைய புடவையை, அவள் மேலும் கீழுமாகப் பார்த்தாள். அவள் உள்ளம் ஊரை வெளிச்சம்போடும் பக்தன், பிள்ளையார் கோவிலுக்கு முன்னால் உடைத்த சிதறுகாயைப்போலச் சுக்கு நூறாகிச் சிதறிக்கொண்டிருந்தது. அந்த உதிராத மலரான மருதாயி திண்ணைத் தூணிலே கையைப் பதித்துக், கண்ணைத் தெருவிலே செலுத்தி, உழைத்து உழைத்து ஓய்ந்த பிற்பாடு களைத்துப்போன உடலோடும், கவலைப்படுகிற நெஞ்சோடும் வீட்டுக்கு வருகிற மாணிக்கத்தை எதிர்பார்த்து நின்றுகொண்டிருந்த நேரம், அவள் போனாள்—அவள்—ஆமாம்—அவளைப்போன்ற ஏழையான அந்த அஞ்சலை! ஆனால் அவள் அந்தநேரத்தில் ஏழையாக இல்லையே! இராணியாக அல்லவா இருந்தாள்? ஊம்! பெரிய இராணி! எந்தச்சக்ரவர்த்தியின் சம்சாரமோ! அவள் புருஷன் பெயரே ஆண்டி! அவன் வாழ்விலும் வருவாயிலும் கூட ஆண்டிதான்!

ஆனால் அந்த அஞ்சலையின் நிலை...? பட்டாடை பளபளக்க, பாதக் கொலுசு சலசலக்க, கட்டிமுடித்த கட்டுக் கதம்பம் கறுப்புக் கூந்தலிலே குந்தியிருக்க, மொட்டு விரிந்ததுபோல் முகச்சிரிப்பை மலரவிட்டுச் சிட்டுப்பறப்பதுபோல் விரைவாக அந்தச் சிங்காரி நடந்த நடை....? இந்த நள்ளிரவில் அவள் எங்கே போகிறாள்? அவளுக்கு ஏது பட்டுச்சேலை. கட்டுக் கதம்பம், பளபளக்கும் தங்கநகை? மருதாய்க்குப் புரிந்துவிட்டது, நிழல் இருட்டிலே நின்றுகொண்டு கைவளைச் சத்தம் காட்டி சஞ்சல நெஞ்சு படைத்த மிருக மனிதர்களைக் கொஞ்ச அழைத்து ஊமையின்பம் கொடுத்துவிட்டு உள்ளதையெல்லாம் பறித்துக்கொள்கிற உத்தியோக உயர்வுக்கு அவள் போய்விட்டாள். 'அஞ்சலை! நீயா இப்படி ஆனாய்?' மருதாயியின் மன அரங்கத்தில் இந்த ஆச்சரிய வாக்கியம் ஆடி நெளிந்தது. ஆம்! அஞ்சலை தண்ணீர்ப் பந்தல் தகரக் குவளையாக மாறிவிட்டவள். அதைக் கண்டவனும் எடுப்பான்; கண்டபடி பயன்படுத்துவான். அந்தத் தகரக் குவளையாவது வாடகையில்லாத உபயோகம்! இவளைத் தொடுவதற்குக்கூடக் காசு!

சீ! மானங்கெட்ட பிழைப்பு! மருதாயி காரித்துப்பினாள். அவளுக்கு அவ்வளவு அருவருப்பு! அவளுக்கோ பட்டுப்புடவை! ஆனால் எனக்கோ...? இனம்புரியாத ஒரு ஏக்கம் இதயத்தில் குடிகொண்டது.

"கூட்டி மெழுகிக் கோலம் போட்டாகிவிட்டது. தண்ணீர் தூக்கி வந்துவிட்டேன். பத்துத் தேய்த்துப் பாத்திரம் துலக்கி முடிந்தது, வேறு வேலை......? அதுதான் எல்லாம் முடிந்துவிட்டதே! எசமான் போய்விட்டு வர்றேங்க!"

"என்ன மருதாயி! வீட்டிலே போயி என்ன செய்யப் போறே? போகலாம் இரு!" மருதாயி வேலைக்காரியாக இருந்து வருகிற வீட்டு எசமானர் அளவு கடந்த அன்பு காட்டி அவளைத் தடுத்து நிறுத்தினார். சும்மாவே அவர் எதிரில் நின்றுகொண்டிருப்பதற்கு அவளுக்கு வெட்கமாக இருந்தது. விடை தெளிவாகத் தெரிந்த ஒன்றுக்கே அவள் ஒரு வினாவை எழுப்பி அவர் முன்னாலே வீசினாள்.

"அம்மா! எப்ப வருவாங்க ஐயா?"

"இன்னும் ஒரு வாரம் ஆகும்! சரி! நீ இங்கே வா!" அவருடைய கண்களில் தாண்டவமாடிய வெறியுணர்ச்சி அவளை நடுங்க வைத்தது. வெட்டிப் போடப்பட்ட தழை, விளை நிலத்துக்கு எருவாக மாறுவதைப்போல் அவருடைய கண்களில் தாண்டவமாடுகிற அந்த வெறி அவளுடைய புடவை ஆசையைப் பூர்த்தி செய்வதாக இருந்தால்...? அவளுடைய உள்ளம் தடுமாறி விழுந்தது. அவள் அவரை நெருங்கினாள். நெருக்கம் அதிகமாகியது. அடுத்த விநாடி மயங்கி விழுந்த அவளுடைய இதயம் உயிர்பெற்று உணர்வுற்று எழுந்தது.

'என் மானத்தை இவரிடத்தில் இப்பொழுது இழந்துவிடுவது; பிறகு அவர் கொடுக்கிற பட்டுப் புடவையை வாங்கிக் கட்டிக்கொள்வது! பிறகு இந்த மானங்கெட்ட உடம்பை மறைக்க எதற்காகப் புடவை? வேலைக்கு வந்தவளை வேறு வேலைக்கு அழைக்கிறானே இந்தப்பாவி?'' அவளுக்கு ஆத்திரம் பொங்கியது.

தாவிப் பிடிக்க முயன்ற அந்தக் கைகளை அவள் தட்டிவிட்டாள். அவருடைய கன்னத்தில் அவளுடைய ஐந்து விரல்களும் பதிந்தன. தன் கணவனுக்குத் தான் செய்ய இருந்த துரோகத்தை நினைத்ததும் அவள் நெஞ்சு நடுங்கியது. உடம்பே ஆடியது. வீட்டுக்கு ஓடினாள். மாணிக்கம் அவளை மலர்ந்த முகத்துடன் வரவேற்றான்.

'இங்கே வா! இதைப் பார்!' என்று சொன்னான். அவன் அவளுக்கு முன்னாலே எடுத்து நீட்டினது வேறொன்றுமல்ல; அவன் அவளுக்காக வாங்கி வந்த புதுப் புடவை!

★


காஞ்சீபுரம்
31-7-60.
தம்பி !
கிருஹப்பிரவேச
மஹோர்சவ
விஞ்ஞாபனம்
நிகழும் விகாரி வருஷம் தைமாசம் சுக்ரவாரம் உத
யாதி சுப முகூர்த்தத்தில் ஸ்ரீ மீனாட்சி சமேத சொக்கர்
கடாட்சத்தால், அடியேன் ஏகாம்பரதாசன், திருமஞ்சன
வீதியில் புதிதாக அமைத்திருக்கும் வீட்டிற்கு
கிருஹப்பிரவேசம்
செய்யப் பெரியோர்களால் நிச்சயித்து இருப்பதால், தாங்
கள் தங்கள் இஷ்டஜன மித்ராளுடன் எழுந்தருளி எம்மை
ஆசீர்வதித்தருள வேண்டிக்கொள்கிறேன்.
அன்றிரவு பிரம்மஸ்ரீ காவியானந்த ஸ்வாமிகளின்
'ருக்மணிபரிணயம்'
எனும் காலட்சேபம் நடைபெறும். அனைவரும் வந்திருந்து கேட்டுக்
பகவத் பிரசாதம் பெற்று ஆனந்திக்குமாறு
கொள்கிறேன்.
இங்ஙனம்
தங்கள் விதேயன்
ஏகாம்பரதாசன்
"அனுக்கிரஹம்"
பாபுவின் பவனி

இப்படி ஒரு அழைப்பிதழ் உனக்குக் கிடைத்தால், என்ன எண்ணிக்கொள்ளுவாய்? என்னண்ணா! இது! எங்கே கிடைத்தது இந்தப் பத்தாம் பசலி? எந்தக் குப்பையிலே கிடந்தது? தமிழா, இது? ஒரே மணிப்பிரவாளம்! யார் இந்தத் தாசன்? தேடித் தேடிப் பார்த்தால், தூய தமிழ்ச் சொற்கள் இந்த அழைப்பிதழிலே, ஒரு பத்துக்கூடக் கிடைக்காது போலிருக்கிறதே! தமிழ் வரிவடிவம் ஒரு கேடா, இந்தக் கலக்கலுக்கு! விஞ்ஞாடனமாம் விஞ்ஞாபனம்! க்ருஹம்! ஏன்? அழைப்பு! இல்லம்! என்று சொன்னால் என்னவாம்? வாயா வெந்துவிடும்?—என்றெல்லாம், கேட்பாய்—கோபம் பொங்கும் உனக்கு. தமிழ் மொழியின் தூய்மையைக் கெடுக்கும் செயலைத்தான், நீ வன்மையாகக் கண்டிப்பவனாயிற்றே!

ஆனால், தம்பி! நான், இந்த அழைப்பிதழை உன்னிடம் காட்டியது, தமிழ் மொழியை எப்படிப் பாழ்படுத்தி இருக்கிறார்கள் பார்த்தாயா, என்பதை எடுத்துக்காட்ட அல்ல!

இதை எனக்குக் கொண்டுவந்து கொடுத்தது யார், தெரியுமா? என் நண்பர் முத்தழகர் தெரியுமல்லவா, உனக்கு; அவருடைய மகன், பொன்னப்பன்! ஆமாம், அவன், அஞ்சல் துறையிலே பணியாற்றுகிறான்—இந்தப் பணிதான்.........

அப்படியா, அண்ணா! முத்தழகர் ஒரு காலத்திலே பெரிய புள்ளியாக இருந்தவர், என்று கேள்விப்பட்டிருக்கிறேன். அந்தக் குடும்பம் இப்போது, வளம் கெட்டுவிட்ட நிலையில் இருக்கிறது போலும் என்று கூறிடுவாய்—ஆறுதலளிக்க. ஆனால், தம்பி! புதுமனை புகுவிழா அழைப்பிதழைப் பலருக்கும் கொண்டுபோய்த் தருகிறானே, பொன்னப்பன்—அவன் துள்ளி விளையாடும் பிள்ளைப் பருவத்தைக் கழித்தது, இப்போது 'அனுக்ரஹம்' ஆகியிருக்கிறதே, அதே இடத்தில்தான்.

வீடு, பலகாலம் கவனிப்பாரற்றுக் கிடந்ததால் கலனாகிவிட்டது. பார்ப்பவர்கள் பழுது பார்க்கக் கூடாதா? இது, பாட்டன் முப்பாட்டன் காலத்துச் சொத்தாச்சே? என்று கூறினர்; பணமுடை முத்தழகருக்கு; ஏகாம்பரம் 'தாசன்' ஆகவில்லை அப்போது; வெறும் ஏகாம்பரம்; பணம் அதிகம் சேரா திருந்த காலம்; ஆனால் தன்னிலும் சற்றுத் தாழ்ந்திருப்பவர்களின் நிலைமையை மோப்பம் பிடித்தறிந்து, சிறு சிறு தொகை கடன் கொடுத்து, 'வட்டி' பெறுவது வாடிக்கை; முத்தழகர் சிக்கினார், கடன் கொடுத்தான்; வட்டிமேல் வட்டி ஏறிக், கடைசியில் வீடே அவனுக்கு என்றாகிவிட்டது, தம்பி! அந்த வீடுதான் இப்போது 'அனுக்ரஹம்' ஆகிவிட்டது; ஏகாம்பரம், 'தாசன்' ஆகி, க்ருஹப் பிரவேசம் நடத்துகிறான்; அந்த அழைப்பிதழைப் பலருக்கும் கொடுக்கும் பணியில், முத்தழகர் மகன் ஈடுபட்டிருக்கிறான்!

**குடிஅரசுத் தலைவர் பாபு இராஜேந்திர பிரசாத் தமிழகத்தில் உலா வர ஏற்பாடாகி இருக்கிறது; அந்த உலாவைக் காமராஜர் ஏற்பாடு செய்கிறார்; நாட்டவருக்கும் அறிவித்திருக்கிறார்; அன்பழைப்புகளை அனுப்பப்போகிறார்!!**

*

குத்திக் குடலெடுத்துக் கொன்றுவிட்டான் காதகன்; குங்குமம் இழந்தாள் குமாரி, குமுறிக் கிடக்கிறாள் கைம்பெண்ணாகி! ஓர் நாள், விவரமறியாச் சிறுமிகள் ஓடோடி வந்து, 'எப்போது பார்த்தாலும் கண்ணீர் வடித்தபடி இருக்கிறாயே அக்கா! வந்து தான் பாரேன், வெளியே! வாணவேடிக்கை! பொய்க்கால் குதிரை ஆட்டம்! ஊர்வலம் வருகிறது, வந்து தான் பாரேன்,! என்று அழைக்கிறார்கள். "நான் இருக்கும் இருப்புக்கு, வேடிக்கை வேறு பார்க்க வேண்டுமா? உள்ளவர்கள் மகிழ்ச்சி கொள்கிறார்கள்—நான்தான், மஞ்சள் இழந்த மாபாவியானேனே—எனக்கு, என்ன வேலை, களிப்பு நடமாடும் இடத்தில்?" என்று கூறுகிறாள் மாது. சிறுமியர், விடாப்பிடியாகப் பிடித்திழுத்து வருகிறார்கள், வெளியே. ஊர்வலம் வருகிறது! என்ன காண்கிறாள் ஊர்வலத்தில்! குத்திக் குடலெடுத்துக் கொன்றானே, கணவனை, அந்த 'வீராதி வீரனை' விருதுகள் பெற்றான் என்ற காரணத்துக்காக, ஊர்வலமாக அழைத்து வருகிறார்கள்!!

தமிழ்த்தாய் தலைவிரிகோலமாகிக் கதறி, என் மக்கள் இனி இந்த இந்தியிடம் சிக்கி என்னென்ன பாடுபடவேண்டி நேரிடுமோ, இந்தியை ஆட்சிமொழி ஆக்கிவிட்டால், அம்மொழியைத் தாய்மொழியாய்க் கொண்டவர்களன்றோ, ஆதிக்கம் செலுத்திடவும், அரசோச்சி மகிழவும் வழி ஏற்பட்டுவிடும், என் மக்கள் இழிநிலைமைக்குத் தள்ளப்பட்டுக், காடு வெட்டவும், கல் உடைக்கவும், குப்பை கூட்டவும் குற்றவேல் புரியவுமான அடிமை நிலையன்றோ அடைவார்கள்; சீராட்டிப் பாராட்டி வளர்த்தேன், செல்வக் குடிபிறந்தீர்கள், செயற்கரிய செய்து வாழ்வீர்கள் என்றெல்லாம் சொல்லிச் சொல்லிப் பூரித்துக்கிடந்தேன். இப்போதோ, எமது மரபு அழித்திடும் இந்தியன்றோ ஆட்சிமொழி ஆகிறதாம் என்று கதறித் துடித்திடும் வேளையிலே, இந்திமொழிக்கு ஓர் வெற்றி உலா நடத்தி, அந்த உலாவினபோது, இந்திக்கு ஆலவட்டம் வீசிடத் தமிழ்த்தாயை அழைத்தால், எப்படி இருக்கும் நிலைமை?

குத்திக் குடலெடுத்துக் கணவனைக் கொன்ற ஓர் மாபாவிக்குக், கொடியவர்கள் உலா ஏற்பாடு செய்து, அதனைக் காண மஞ்சள் இழந்த மாதை அழைத்தால், அவள் எவ்வளவு வேதனை அடைவாளோ, அஃதே போன்ற வேதனையன்றோ ஏற்படும், ஆட்சிமொழி ஆகிடும் இந்திக்கு ஆலவட்டம் சுற்றத் தமிழ்த்தாயை அழைத்தால்!

**1965க்குப் பிறகு இந்தியே ஆட்சிமொழி என்று அறிவிக்கும் ஆணையைப் பிறப்பித்துவிட்டு, குடிஅரசுத் தலைவர் தமிழகத்தில் உலா வருவது, இந்தி வெற்றி விழா நடத்துவதற்கு ஒப்பானது தானே. எப்படித் தமிழர்கள் இதைத் தாங்கிக்கொள்ளமுடியும்? ஏன் தாங்கிக்கொள்ளவேண்டும்?**

குடிஅரசுத் தலைவர், 'சாந்த சீலர்' என்று போற்றப்படுபவர்; வெள்ளையரை விரட்டிடும் போரிலே முன்னணி நின்றவர்; பல கஷ்ட நஷ்டம் கண்டு கலங்காதிருந்தவர்; காந்தியாரின் அன்பினைப் பெரும் அளவு பெற்றுத் திகழ்ந்தவர்; தம்பி! இந்தச் சிறப்புகளை, நான் மறந்திடவில்லை, நீயும் அறிந்தே இருக்கிறாய்; ஆனால், குடிஅரசுத் தலைவர், இந்திமொழி விஷயத்திலே மிகக் கண்டிப்பானவர்; இந்தி வெறியர்களே, அவரைத்தான் தமது பாதுகாவலராகக் கருதுகிறார்கள்; நேரு பண்டிதர்கூடச், சில வேளைகளில்—

னெளிகிருர், ஆங்கிலத்தின் நேர்த்தி பற்றித் தன்னை மறந்த நிலையில்கூடப் பேசுகிருர், ஆனால் பாபு இராஜேந்திரர், எப்போதும், இந்தி விஷயத்திலே, திட்டவட்டமாகவும், தீவிரமாகவும், துணிவாகவும் பேசி வருகிருர்; எனவே, இந்தித் திணிப்புக்கு இவரே தக்க கருவி, இவரைக் கொண்டுதான், இந்திமொழி ஆதிக்கம் வெற்றிபெறச் செய்துகொள்ளவேண்டும் என்று, இந்தி வெறியர்கள், முழு நம்பிக்கையுடன், இருந்து வருகிருர்கள்.

எனவே, பாபு இராஜேந்திர பிரசாத், இந்தி ஆதிக்கக்காரர் களின் பிரதிநிதியாகத் தமிழகம் வருகிருர்—எந்தத் தமிழகம், ஏற்க மாட்டோம் இந்தியை என்று எக்காளமிட்டு நிற்கிறதோ, அந்தத் தமிழகத்தில் உலா வருகிருர்!

*

"ஏடா, மூடா! எனது மொழி இணையற்ற எழிலுள்ள மொழி! தாய்மொழி! தமிழ்மொழி! என்றெல்லாம், முழக்கமிடுகிருயே! செம்மொழி என்று பேசுகிருய், செருக்குடன்! வேறு எம்மொழியிலும் காணக் கிடைக்காத கருத்துக் கருவூலங்கள் உண்டு எமது மொழியிலே, என்று இறுமாந்து பேசுகிருய்! முடியுடை மூவேந்தர்கள் கட்டிக் காத்தனர், போற்றி வளர்த்தனர், எமது இனிமைத் தமிழ்மொழியை என்று சுவை சொட்டப் பேசுகிருய்! இதோ, பார், பவனி வரும் பாபு, இந்திமொழியின் ஆதிக்கத்தை விளக்கிடும், நடமாடும் சான்று! என்ன சொல்கிறீர்கள், இதைக்கண்டு! நல்ல மொழி என்கிறீர்களே, உமது தமிழ்; எமது இந்தி மொழியை, ஆட்சிமொழி ஆக்கிவிட ஆணையைப் பிறப்பித்துவிட்டு, உலா வரும் அஞ்சா நெஞ்சனும் எமது பாபுவைப் பாராட்டி, ஒரு வாழ்த்துப்பா, இயற்றுங்கள்; பரிசு வேண்டுமானால் பெறலாம்! — என்றன்றோ, இந்தி வெறியர் பேசுவர்.

இந்தி மொழியை ஆட்சி மொழியாக்கிவிட்டால், சமாளிக்கமுடியாத எதிர்ப்பு எழும், சண்டமாருதம் போலத் தமிழர் கொதித்தெழுந்து நிற்பர், அவர்கள் விழி உமிழும் கோபக்கனல், தீயாகித் திக்கெட்டும் பரவும், என்றெல்லாம் பேசுகிருர்களே, என்ன செய்ய இயலும், பிடியை எம்மிடம் சிக்கிட விட்டுவிட்ட தமிழர்களால், அடிமைத் தளைகளையே அணிபணி என்று எண்ணிக்கொண்டுள்ள ஏமாளிகளால், கொடுத்ததைப் பெற்றுக்கொண்டு குழைந்துகிடக்கும் கும்பலால்! பவனி வருகிருர், பாபு! பல்லிளித்து நிற்க ஆட்கள் வேண்டுமா, காட்டுகிறோம், பாருங்கள்! பராக்குக் கூறிடுவோர், இடம் பிடிக்க முந்துவதைக் காட்டுகிறோம், பாரீர்! — என்றல்லவா, பேசுவர், எதிர்ப்பு எதுவாயினும் அதனை முறியடித்து, எதிர்ப்போரின் இடுப்பொடித்தோ உயிர்குடித்தோ, எதிர்ப்பை அழித்தொழித்து, எமது இந்தியை ஆட்சிமொழி ஆக்கியே தீருவோம் என்று பேசி நிற்கும் வன்கணாளர்கள்.

*

"அம்மா! அதுயார்?" என்று கேட்கும் சிறுவனுக்கு, தாய் என்னபதில் கூறுவது!

"அவர்தானடா, கண்ணே! 'அம்மா' என்று எந்தத் தமிழ்மொழியால் இனிமை வழிய வழிய என்னை நீ அழைத்து அகமகிழச்செய்கிருயோ, அந்தத் தமிழ் மொழியைத் தாய்மொழியாகப்பெற்றுள்ள மக்களுக்கு, வேற்று மொழியை ஆட்சிமொழி ஆக்கிவிட்ட உத்தமர்! உன் தாய்மொழியை நீயே இகழ, இழக்கச் செய்திடும் 'சத்புருஷர்!'—என்ரு பதிலளிக்கமுடியும்?

"ஐயோ, அம்மா! நம் தாய்மொழிக்கே ஆபத்துத் தேடியவரா, இவர்? இப்படிப்பட்டவர், என்னையும் உன்னிடம் இருந்து பிரித்து, எவளோ ஒரு வெள்ளாட்டியிடம் விரட்டிவிட்டு, உன்னைப் பெற்றவள் இருக்கட்டும் ஒருபுறம்; இனி இவளிடமே நீ இருந்து வரவேண்டும்!" என்று கட்டளை பிறப்பிப்பாரோ? பயம் மேலிடுகிறதே! அவரைக் காணவும் கூசுகிறதே!! —என்றன்றோ, சிறுவனும் கூறுவான்.

"அண்ணா! அண்ணா! அகம் என்பாய், புறம் என்பாய், அழகுதரும் இலக்கியம் என்பாய், அவனியோர்க்கே அறிவளிக்கும் அறநூலாகும் குறள் என்பாய்; அந்தத் தமிழ்மொழி பயின்றிடும் நமக்கு ஆட்சி மொழியாக இந்தியா? அதற்கான கட்டளை பிறப்பித்தவர், இவர்தானா? இவர், விழாக்கொண்டாடும் நாட்டிலா, நாம் நடமாடிக்கிடக்கிறோம்" என்று தம்பி கேட்பான், அண்ணனை.

*

தம்பி! தமிழகம், எதை எதையோ தாங்கிக்கொள்கிறது; பசி, பஞ்சம், பட்டினி, வேலையில்லாக் கொடுமை, விலையேற்றம், கடற்கொந்தளிப்பு, எனும் ஏதேதோ இடர்ப்பாடுகளைத் தாங்கிக்கொண்டிருக்கிறது; எனினும் இதனையுமா தாங்கிக்கொள்ள வேண்டும்?

இந்தி ஆட்சிமொழி ஆகிவிடும்; தமிழர் தாழ்நிலைக்குத் தள்ளப்பட்டுவிடுவர் என்ற அச்சம் பிடித்தாட்டும் நிலையில் உள்ள தமிழர்களுக்கு ஒரு ஆறுதல் மொழி அளிக்காமல், இந்தி பேசாதாரின் எதிர்காலம் இருண்டுபோய்விடாது, இந்தி பேசுவோர் ஆதிக்கம் செலுத்தவும், மற்றையோர் அடிமைப்பட்டும் கிடக்கும் நிலை ஏற்படாது என்று உறுதிமொழி அளிக்காமலும் குடிஅரசுத் தலைவர் உலா வருவது எற்றுக்கு!

நேரு பண்டிதர் வாக்குறுதி அளித்தார், பாராளுமன்றத்தில், ஒரு முறைக்கு இருமுறை:

அதனைத் தம்பி! நிதி அமைச்சர், நினைவுபடுத்துகிருர்—தேவையில்லை. அமைச்சரிடம், நாம் இந்தத் 'தபால்' உத்யோகம் பார்க்கும் ஆற்றல் இருப்பதை மட்டுமா எதிர்பார்க்கவேண்டும்! நேரு பண்டிதர் தந்த வாக்குறுதி நமக்கும் தெரியும், நாட்டுக்கும் நாம் இதனை அறிவித்திருக்கிறோம்.

ஆனால், விளக்கப்படவேண்டிய பிரச்சினை, நேரு பண்டிதர் அளித்த வாக்குறுதிபற்றிக் குடிஅரசுத் தலைவரின் ஆணையிலே, ஏன் விளக்கமான, திட்டவட்டமான குறிப்பு இல்லை—என்பதாகும்.

இந்தி மொழியை ஆட்சி மொழியாக்குவதற்கு என்னென்ன நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்படவேண்டும், அதற்கு என்னென்ன குழுக்கள் அமைக்கலாம், என்பதுபற்றி ஆர்வமும் அவசரமும் காட்டப்பட்டுச், செயல்பட்டு வருகிறது; அந்த ஆர்வமும் அவசரமும்; இந்தி பேசாத மக்களுடைய கருத்து அறியவேண்டும், காலக்கெடுவின்றி ஆங்கிலம் துணை ஆட்சி மொழியாக இருக்க வேண்டும், என்பதிலே ஏன் காட்டப்படவில்லை; அந்த வகையிலே என்ன முயற்சிகள் எடுத்துக்கொள்ளப்பட்டன.?

இந்தி பேசாத மக்களின் கருத்தை அறியவும், அதற்கேற்ப நடவடிக்கை எடுக்கவும் உறுதி இருக்குமானல், அந்த வகையில் இந்திய அரசியல் சட்டம் திருத்தப்படவேண்டும்! அதற்கான நடவடிக்கை, என்ன எடுத்துக்கொள்ளப்பட்டது?

அந்த நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படாமல், இந்தியை ஆட்சி மொழி ஆக்குவதற்கான வழிவகைகளிலே மட்டும், ஆர்வமும் தீவிரமும், அவசரமும் காட்டப்படுவதுதான், பேராபத்து என்கிறோம்.

தம்பி! இதற்காகத்தான், இந்தி எதிர்ப்பு அறப்போர் நடாத்த நமது கழகம் முடிவெடுத்திருக்கிறது.

இது, குடிஅரசுத் தலைவருக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது.

அதனைக் கண்ணுற்றவர், அது குறித்து ஏதும் கூறாமல், உலா வர மட்டும் ஏற்பாடு செய்கிறார் என்றால், உன்னையும் என்னையும், நம்முடன் திரண்டு நிற்கும் பல இலட்சக்கணக்கானவர்களையும், துச்சமென்று மதிக்கிறார்—இவர்களை ஏதும் செய்யலாம், என்று எண்ணுகிறார்; என்றுதானே பொருள்?

*

குடிஅரசுத் தலைவரின் உலா, இந்த அவர் போக்கை, நாடு, ஏற்றுக்கொள்கிறது, அனைவரும் மண்டியிட்டுக் கிடக்கிறார்கள், என்று உலகுக்கு உணர்த்தவும், இந்தி ஆதிக்கக்காரருக்கு உச்சி குளிர வேண்டும் என்பதற்கும்தானே பயன்படும்!

தம்பி! குடிஅரசுத் தலைவரோ, அல்லது இங்குள்ள எடுபிடிகளோ, நம்மை மதிக்காதது பற்றி, மனம் குமுறி என்ன பயன். மெயில் பத்திரிக்கைக்கே, மதிப்பு இன்னும் ஏற்படவில்லையே. அறிவு அவ்வளவும் உருட்டித் திரட்டி, அந்த இதழ் நடாத்து'வோரி'டம் ஒப்படைக்கப்பட்டுவிட்டதுபோலவும், இதழின் பணி, நாட்டு நிலைமையை எடுத்து விளக்குவது என்றிருக்க, அதை மறந்து, ஒரு பெரிய இயக்கத்துக்கு 'புத்திமதி' கூறிடும் போதகாசிரியராகத் தன்னைத் தானே நியமித்துக்கொண்டு, அறப்போர் நடத்தாதீர்! என்று எழுதுகிறது.

ஏதோ, அந்த இதழுக்குத் தன் அறிவிலே அவ்வளவு அபாரமான நம்பிக்கை—முற்றிவிட்டிருக்கிறது—இருந்துபோகட்டும். நமக்கோ நாட்டுக்கோ, அது நட்டமல்ல. விந்தை மனிதர்களை எவ்வளவோ காண்கிறோம். இது ஒன்று அதிலே! ஆனால், மெயில் வேறொன்று கூறி இருக்கிறது, அதுதான், தம்பி! என் நெஞ்சை உள்ளபடி, குத்திக் குடைவதாக இருக்கிறது.

திராவிட முன்னேற்றக் கழகம் நடத்தும் கிளர்ச்சிகளின்போது, துரைத்தனம், இலேசான தண்டனைகள் கொடுக்கிறதாம்—சீக்கிரம் சீக்கிரம் சிறையிலிருந்து விடுதலை தந்துவிடுகிறதாம். எனவேதான், கழகம், மறுபடியும் மறுபடியும் கிளர்ச்சிகளில் ஈடுபடுகிறதாம்! எனவே, மிகக் கடுமையாகத் தண்டிக்கவேண்டும், என்று எழுதுகிறது.

துரைத்தனத்தின் மனம் ஏதோ இலவம் பஞ்சாக இருப்பதுபோலவும், இரும்பாக்கிக்கொள்ளவேண்டும் என்று தூண்டிவிடவேண்டிய பொறுப்புத் தனக்கு இருப்பதாகவும், இந்த இதழ் எண்ணிக்கொள்வது பேதைமை—வேறென்ன?

பிடிக்காதவர்கள் மீது, வேறு சிலரைத் தூண்டிவிட்டு, வேடிக்கை பார்ப்பவர்களை, மிகமிக மட்டமான மக்கள் என்பர் ஆன்றோர்.

மெயில் இதழுக்கு, நாம், கடுமையாகத் தண்டிக்கப்படுவதிலே என்ன அலாதியான மகிழ்ச்சி ஏற்படுமோ, எனக்குத் தெரியவில்லை—அதையும் அனுபவிக்க விரும்பினால், தாராளமாக அனுபவித்துவிட்டுப் போகட்டும்.

ஆனால், தம்பி! இந்த நேரத்தில், நாமும் ஒரு விஷயத்திலே, தெளிவு பெற்றுக்கொள்ளவேண்டும்.

**நாம் கொண்டுள்ள கொள்கையின் தூய்மையிலே நமக்கு அசைக்கமுடியாத நம்பிக்கை இருக்குமானால், நெஞ்சார நாம் அந்தக் கொள்கையிடம் பற்றுக்கொண்டிருப்பது உண்மையானால், எத்துணை கொடுமைமிக்க தண்டனையையும், ஏற்றுக்கொள்ள நாம் தயாராக இருக்கவேண்டும்.**

## நாம் அதற்குத் தயாராக இருக்கிறோமா?

**நீண்டகாலச் சிறைவாசம், சொத்துப்பறிமுதல், போலீஸ் தடியடி துப்பாக்கிப் பிரயோகம்—எனும் அடக்குமுறையின் பல்வேறு உருவங்கள், நம்மீது பாய்ந்து, நம்மைப் பிய்த்தெறியும் நிலை பிறக்கலாம்; தாங்கிக்கொள்ளத் தயாராக இருக்கிறோமா?**

எதற்கும் தயாராக இருப்பதுதான், இலட்சியவாதிகளின் கடமை—இலட்சணம். நம்மை மாற்றார் மட்டுமல்ல, மந்தமதி படைத்தோரும், இவர்கள் இலட்சியவாதிகள் என்பதில் ஐயமில்லை, இல்லையெனில் உண்டு களித்திருக்க எல்லா வாய்ப்புகளும் இருக்கும்போது இவர்கள், அடக்குமுறையின் உறுமலைப் பொருட்படுத்தாமல் பயங்கரப் பற்களை அது நறநறவெனக் கடித்துக்காட்டிக் கிளம்பும் என்பது தெரிந்தும், அதன் பக்கம் நின்று 'மெயில்' போன்ற இதழ்கள், விடாதே! கடி! பாய்ந்து பாய்ந்து கடி! பிய்த்துப் பிய்த்து எடு! என்று உசுப்புவது தெரிந்தும், தங்கள் கடமையைத் துணிந்து செய்கிறார்களே என்பதை உணர்ந்து புதுத் தெளிவு பெறவேண்டும்.

அறப்போர் பலவற்றில், நமது கழகத்தவர் ஈடுபட்டு, ஏற்கனவே தியாகத் தழும்புபல பெற்றுள்ளனர்; எனினும், இப்போதும், நமது வீரத்தையும் தியாகமேற்கும் திறத்தையும் பழித்துப் பேசிடத் துணிவு கொள்கின்றனர். ஒரேயடியாகத் தலைதூக்க முடியாதபடி அடித்து நொறுக்கிவிடவேண்டும், இவர்களின் தொல்லை தாளக்கூடியதாக இல்லை என்ற நினைப்பு, வெறி அளவுக்கு அவர்களுக்கு ஏற்பட்டுவிட்டதால், எந்தக் கொடிய முறைகளைக் கையாளவும் தயாராகிக்கொள்வர். தயாராகும்படி மெயில் இதழ் போன்றவைகள் தூண்டிவிடும், தூபம்போடும். "உமது வீரதீரம் அபாரம்! உம்மிடம் நாடே சொக்கிக் கிடக்கிறது. அடக்குமுறை வீசினால், நாட்டு மக்கள் உள்ளத்தில் அருவருப்பு ஏற்படுமோ, வெறுப்புப் பீறிட்டு எழுமோ என்று எண்ணிக் கவலைப்படாதீர்! நாங்கள் இருக்கிறோம், உமக்குத் துதிபாட!! நீங்கள் அவர்களைச் சுட்டுத் தள்ளுங்கள்—செத்தொழிந்தன நாட்டைக் கெடுக்கும் பீடைகள் என்று தலையங்கம் தீட்டுகிறோம், உமக்குத் திருப்புகழ் பாடுகிறோம்!" என்று கூறிட இதழ்கள் உள்ளன.

ஆயினும், தம்பி! நம்மிலே பலர் வீழ்ந்துபட்டாலும், நமது உடலிலிருந்து கொட்டும் குருதி கண்டு, கள்ளமில்லா உள்ளம் கொண்டோர், சுயநலமற்றோர், நாடு, மொழி, இனம் என்பனவைகளிலே நம்பிக்கையும் பற்றும் கொண்டோர், நமக்காக இரக்கம் காட்டி; ஒரு சொட்டுக் கண்ணீர் வடித்தால், போதுமடா, தம்பி! நாம் பட்ட கஷ்டமத்தனையும் பஞ்சாகப் பறக்கும், நமது உடலிலே ஏற்பட்ட புண் ஒவ்வொன்றும் ஒவ்வொரு

நாவாகி, உலகுக்கு, உண்மையை உரைத்திடும். சுற்றிச் சுற்றி வந்து ஊர் மக்களுக்கு, உண்மையை விளக்கி வரும் நாம், சுடப்பட்டுக் கீழே சாய்ந்தால், காட்டிலே சந்தன மரங்களின்மீது கரி உராய்வதால், காடு முழுதும் மணம் பரவும் என்பார்களே, அது போல் நாடெங்கும், வீரம் பரவும், வெற்றி தொட்டணைத்து உச்சி மோந்து முத்தமிடும். வேண்டுவது, அடக்குமுறையின் தாக்குதலை ஏற்றுக்கொள்ளும் நெஞ்சுரம். அந்த நெஞ்சுரம், நாம் நேர்மைக்குப் பாடுபடுகிறோம் என்ற நம்பிக்கையிலே இருந்து பிறக்கிறது. அந்த உணர்ச்சியால் உந்தப்பட்டவர்கள், நாம் என்பதை உலுத்தர்கள் உணரமாட்டார்கள்; எனவேதான் அவர்கள், தெருக்கோடிச் சாவடியில் முடக்கிக்கொண்டு கிடக்கும் செயலாற்ற முடியாத நிலைபெற்ற 'போக்கிரி', மற்றவர்களைப் பார்த்துக் கூறுவானல்லவா, 'பயல்களை விடக்கூடாது! செம்மையாக உதைக்கவேண்டும்! கைகால்களை உடைத்திடவேண்டும்!' என்று, அதுபோலப் பேசுகின்றனர்.

பிறிதோர் நாள், தமிழகத்தில், நாம் நடத்தும் மாநாட்டிலே, பத்து இருபதுபேர், கட்டையை ஊன்றிக்கொண்டு, தத்தித்தத்தி நடந்துவருகிறார்கள் என்று வைத்துக்கொள்—இப்போது நாம் திட்டமிடும் அறப்போரை அழித்திட ஆட்சியாளர், மெயில்தரும் மேலான அறிவுரையின்படி தடிகொண்டு தாக்கி, கால்களை ஒடித்துவிடுவதால்—தம்பி! பத்து இருபது பேர், காலிழந்து, கட்டையை ஊன்றிக்கொண்டு, தத்தித் தத்தி நடந்து, மாநாட்டுக் கொட்டகைக்கு வந்தால், அதைவிட வீரஞ் செறிந்த காட்சி, வெற்றித் திருவைத் தேடித் தந்திடவல்ல உணர்ச்சிமிக்க காட்சி, வேறென்ன இருக்க முடியும்!

"அதோ, கடிலாக்கில் வந்து இறங்குகிறாரே, கனவான், கருத்தமுகம், வைரக்கடுக்கன், அவர்; காட்டிலாகா காண்ட்ராக்டர், ஒரே வருஷத்தில் கால்கோடி இலாபம் பெற்றவர். காங்கிரஸ் தேர்தல் நிதிக்கு இரண்டு இலட்சம் கொடுத்தார்."

"அவரைப் பாருங்கள்—சிரித்தபடி இருக்கிறார், நாலைந்து சீமாட்டிகள் சூழ நிற்கிறாரே, அவர்தான்—அவர் அடுத்த முறை தேர்தலில் ஈடுபட, இப்போதே அச்சாரம் கொடுப்பதுபோல், தமது மாளிகையில் ஒன்றைக் காங்கிரஸ் காரியாலயம் நடத்திக்கொள்ள, கால் காசுகூடப் பெறாமல், கொடுத்திருக்கிறார்—அநியாய வட்டி வாங்குபவர் என்று அழுகுரலிற் பேசுவர் சிலர்—வட்டி வியாபாரம்தான்—நல்ல பக்தர்—நாட்டுப்பட்டி மிட்டாதாரர்"

"கவர்னர், பார், கவர்னர். அவருடைய மாளிகை எவ்வளவு பெரிது தெரியுமா? மான்கள் கூட்டம் கூட்டமாகத் துள்ளி ஓடிடும் காட்சியைக் காணவேண்டுமே, அவருடைய தோட்டத்தில்—மிக அழகாக இருக்கும்."

"அதோ, அவர், உயர்நீதிமன்ற முதல்வர்! சட்ட நிபுணர்!"

"அந்தப்பக்கம் நிற்பவர், ஆறு ஆயிரம் மாதச் சம்பளம் பெறும், உயர்தர அதிகாரி. நிர்வாகச் செலவை எப்படிக் குறைப்பது என்பதுபற்றி அவ்வப்போது யோசனை கூறுவதற்காக நியமிக்கப்பட்டிருக்கும் பிரத்தியேக அதிகாரி"

"இவர் சகலகலா பண்டிதர் சம்பூர்ணானந்தர். சமஸ்கிருத காவியங்களிலே விசேஷ பாண்டித்யம் இவருக்கு. அமெரிக்கா போய் வந்தார், சென்றமாதம்—கீதைபற்றி 'உபன்யாசம்' செய்ய!"

தம்பி! இவ்விதமெல்லாம், குடிஅரசுத் தலைவர் போன்றோருக்காக நடத்தப்படும் கோலாகல விழாக்களில் காணப்படுவோர் பற்றிப், பளபளப்புக் கண்டு பரவசம் அடைவோர், பேசட்டும்.

நமது எதிர்கால மாநாடுகளில் "அதோ காலிழந்து காணப்படும் கந்தசாமி, சிறுகடை வைத்துக்கொண்டு காலந்தள்ளிவந்தான்—ஆறு குழந்தைகள்—சொந்த வீடுகூடக் கிடையாது, ஏழை. ஆனால் கோழை அல்ல! எனக்கு வீடு இல்லாமலிருக்கலாம், என் தாய்மொழி நாடு இல்லாமல், நாதியில்லாமல் இருந்திட விடமாட்டேன் என்று கூறினான், இந்தியை எதிர்த்தான், அடக்குமுறை அவனை நோக்கிப் பாய்ந்தது, காலிழந்தான் வீரன், கண்ணீர் பொழிந்தனர் மக்கள், இதோ வருகிறான், வெற்றிநடை நடந்து! அவன் நடந்துவரும் பாதையை மக்கள் தமது கண்ணீர் தெளித்து வணங்குகிறார்கள். நாடு வாழத் தன்னை நொண்டியாக்கிக்கொண்டான். நாம் வாழ அவன் வதைப்பட்டான்!"

"எழும்பி எழும்பிப் பேசுவானே, என் மொழி என் நாடு! என்றெல்லாம், ஒரு இளைஞன், கவனமிருக்கிறதல்லவா, அவன்தான், அதோ தத்தித் தத்தி நடந்து வருபவன்—காலிழந்தான்"

"அதோ, கண்ணிழந்தான்! கரமிழந்தான்!!"

தம்பி! இப்படிப்பட்ட எழுச்சியூட்டும் பேச்சுக்கள் இளம்பிடித்தக்க நிலையில், ஊர்காக்கப் புறப்பட்டு உறுப்புகளில் சிலதை இழந்தவர்கள், நமது மாநாட்டிலே, வந்து சேரத்தக்க வகையில், அடக்குமுறை அவிழ்த்துவிடப்படவேண்டும்.

காலோ, கையோ, கண்ணோ, போனவர்களில் ஒருவனாக, நான் இருக்க விரும்பவில்லை—தம்பி!

அதுமட்டும்தான் எனக்கு என்றால், நான் மெத்த வருத்தப்பட்டுக்கொண்டுதான் இருப்பேன்.

அப்படிப்பட்டதோர் மாநாடு நடக்கையிலே, நான் காலிழந்து, கரமிழந்து வருவதைவிட, அந்த மாநாட்டைக் காணமுடியாத நிலையில், 'உயிரிழந்தோன்' ஆகிவிடவேண்டும்—என்று விரும்புகிறேன்.

என் விருப்பம் நிறைவேறும் அளவிலும் வகையிலும், அடக்குமுறையை அவிழ்த்துவிடும்படி மெயில், இன்னும் சிலமுறை தூபமிட வேண்டுமென விரும்புகிறேன்.

இம்முறை நேரிடுமோ, பிறகோ, என்பதுவேண்டுமானால், விவாதிக்கப்படவேண்டியதாக இருக்கும் பிரச்சினையே தவிர, நம்மிலே பலர், இந்த நெருப்பாற்றில் இறங்கிய பிறகுதான், நாம் விரும்பும் இன்பத் திராவிடம் கிடைக்கும் என்பதை அறிந்து கொள்ளும் அளவு தம்பி! நான் படித்திருக்கிறேன்.

அங்ஙனம் இன்னுயிர் ஈந்து, இலட்சிய வெற்றி கண்டவர்களைப்பற்றிப் படித்து இன்புறும்போதெல்லாம், நமக்கு எப்போது அந்தப் பேறு கிடைக்கும் என்று எண்ணி எண்ணி இருந்திருக்கிறேன்.

நாம் இருக்குமிடத்திலிருந்து நெடுந்தொலைவில், முற்றிலும் வேறான சுற்றுச் சார்பில், வாழ்ந்துவரும், மெயில் போன்றார்கள், நாம் ஏதோ, விளைவு தெரியாமல், விளைவுகளைத் தாங்கிக்கொள்ளத்தான் வேண்டும் என்ற உறுதிகொள்ளாமல், விடுதலைக் கிளர்ச்சியில் ஈடுபட்டிருக்கிறோம் என்று எண்ணிக்கொண்டுள்ளனர். தம்பி! நமது தியாகத் தழும்புகளின்மீது செந்நிறம், ஆறாது இருக்கவேண்டும் என்று விரும்புகிறோம்-ஏனெனில், நமது கொள்கையின் தூய்மையை உலகுக்குக் காட்ட, இதனைவிட வேறு மகிமை வாய்ந்த சான்றுகளை நம்மால் பெறமுடியாது.

அந்த நல்ல வாய்ப்பிலே ஒரு அளவு, இம்முறை எழ இருக்கும் அறப்போரின் பலனாக, நமக்குக் கிடைக்குமானால், நன்றி செலுத்தி ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறோம்.

நாம், அவ்விதமான உணர்ச்சி நிரம்பப் பெற்றவர்கள் என்பதைத் துளியும் அறியாததால்தான், குடிஅரசுத் தலைவரை இந்தச் சமயமாகப் பார்த்து வரவழைத்துக் கோலாகலமான விழா நடத்தத் திட்டமிடுகிறார்கள்—இங்குள்ளோர்.

குடிஅரசுத் தலைவர், கட்சிகளுக்கு அப்பாற்பட்டவர் அவருக்கு நாட்டவர் அனைவரும் மரியாதை காட்டவேண்டும் என்று இனி உபதேசம் செய்வார்கள்.

அவருடைய தனிச்சிறப்பு இயல்புகளை எடுத்துக் கூறி, எப்படிப்பட்ட நல்லவர் தெரியுமா என்று, கேட்போர் என்புருக எடுத்துக் கூறுவர்.

ஆமென்று நம்பி, அனைவரும் இருந்துவிட்டால்' குடிஅரசுத் தலைவரின் உலா முடிந்ததும், அவர்' தில்லி சென்று, உலகுக்கு அறிவிப்பார்,

"யாம் பத்து நாட்களாகப் பாரதத்தின் தென் பகுதி சென்று வந்தோம்.

சென்னை முதல் தூத்துக்குடி வரை சென்றோம்.

சென்ற இடமெங்கும் சிறப்பான வரவேற்பு, மக்கள் வெள்ளம்போல் கூடிநின்றனர்; வழிபட; வாழ்த்துப் பெற.

இந்தப் பகுதியில்தான், தனிநாடு, தனி இனம் என்ற தவறான பேச்சுப் பேசிக்கிடக்கும் ஒரு சிறு கூட்டம் இருக்கிறது. அந்தக் கூட்டம், இந்தியைக் கூட எதிர்க்கிறது!!—என்று எனக்குச் சிலர் கூறினார்கள்.

ஆனால், என் பத்து நாள் உலாவின்போதும், ஒரு இடத்திலாகிலும், ஒரு துளி எதிர்ப்பும் எழவில்லை; இந்திக்கு எதிர்ப்பு இருப்பதாக ஒரு சிறு அறிகுறியும் காணோம்.

இந்தியைத் தேசிய மொழியாக அனைவரும் ஏற்றுக்கொண்டுள்ளனர் என்பதற்கு, என் விஜயம் வெற்றியுடனும் விமரிசையாகவும் நடைபெற்றது ஒன்றே போதும். ஜெய்ஹிந்!"

என்று அறிக்கை வெளியிடுவார். அகில உலக இதழ்களும், அதனை எடுத்து வெளியிட்டு, இந்தியை இந்தியர் ஏற்றுக்கொண்டனர் என்று கூறும்—தமிழர் என்றோர் இனம் உண்டு என்று எவரேனும் கூறினால், எந்தப் புதை குழியில், எத்தனை ஆயிரம் அடி ஆழம் தோண்டிப் பார்த்தால் கிடைக்கும் என்று. வேடிக்கைக்காக அல்ல, உண்மையாகவே கேட்பர்.

ஏனெனில், தமிழ் இனத்தின் சிறப்பு என்றும், தமிழ் மொழியின் சிறப்பு என்றும், நாம் எடுத்துக் கூறி வருவதை மட்டுமல்ல, ஏற்கனவே, பேரறிவாளர் பலரும் எடுத்துச் சொல்வதையும் கேட்ட எவரும், அந்த இனம் அடியோடு அழிந்துபடா முன்பு, இந்தி ஆட்சி மொழியாகி ஆதிக்கம் செலுத்த முடியாது என்றே இயற்கையாகவே எண்ணுவர்.

•

குடிஅரசுத் தலைவரின் 'விஜயம்' இந்தக் குறிக்கோளுக்காக அல்ல, என்று விளக்கம் அளிக்கப்படும். உண்மையாகவும் இருக்கக்கூடும்.

ஆனால், அவர் உலாவின் விளைவு என்னவாக இருக்க முடியும்?

எனவேதான், தமிழர் தமது இந்தி எதிர்ப்பு உணர்ச்சியை எடுத்துக்காட்டத் தவறினால், உண்மை மறைக்கப்பட்டுப் போய்விடக் கூடும், உலுத்தர்கள் அதனையே சாக்காகக்கொண்டு, இந்திக்கு எதிர்ப்பே இல்லை என்று பேசி உலகை ஏய்ப்பார்களே, என்ற கவலை, மிகவும் ஏற்படுகிறது.

நமக்கு ஏற்படும் இந்தக் கவலை குறித்தும் குடிஅரசுத் தலைவர் அறிந்து கொள்ள ஏற்பாடுசெய்யப்பட்டது. எனினும், ஒவ்வொரு நாளும், குடி அரசுத் தலைவர்,

சென்னை
தூத்துக்குடி
நாகர்கோயில்
கன்னியாகுமரி
கோவை
சேலம்
மேட்டூர்
வேலூர்

ஆகியஇடங்களில் விழா நடத்திச்சொற்பொழிவுஆற் இருக்கிறார்—கவர்னர் உடன் வருகிறார் — காமராஜ கூட வருகிறார்—என்ற செய்திகள், வெளிவந் வண்ணமிருக்கின்றன.

என்ன செய்வது? நமது நாட்டிலே மூண்டுகிடக்கும், இந் எதிர்ப்பு உணர்ச்சியை, எப்படிக் குடி அரசுத் தலைவர் உணரும் படி செய்வது?

உடன்வருவோர், அவரிடம் உபச்சாரம் பேசுவர் உண்மை நிலையைக் கூறப்போவதில்லை.

அவராகக் கேட்டாலும், தேர்தலில் தோற்ற ஒரு சிறு கூட்டம், காரணமற்று இந்தியை எதிர்க்கிறது என்று கூறி, அவருடைய புன்னகையைப் பரிசாகப் பெறவே முயற்சிப்பர்.

தமிழரின் தவிப்பை, தத்தளித்துக் கிடப்பதை அவர் அறிய செய்வது எவ்வகையில்?

உமது ஆணை கண்டு, தமிழர் அஞ்சுகின்றனர்— இந்தி ஆதிக்கமொழியாகிட வழிவகுத்துவிட்ட என்று. நேரு பண்டிதர் கொடுத்த வாக்குறுதியும் மீறப்படுகிறது என்று. இதை நீக்கும் வகையில்;

**இந்தி பேசாத மக்களின் விருப்பம் அறியாமல், இந்தி திணிக்கப்படமாட்டாது.**

**அவர்களின் விருப்பப்படி, காலக் கெடுவின்றி ஆங்கிலம், துணை ஆட்சிமொழியாக இருந்திடும்.**

**அதற்கான முறையில் இந்திய அரசியல் சட்டம் திருத்தப்படும்.**

என்று, குடிஅரசுத் தலைவரை, 'அறிக்கை' பிறப்பித்துவிட்டுத் தமிழகம் வந்து, உலா நடத்திக்கொள்ளும்படி இங்குள்ள அமைச்சர்கள் கூறவேண்டும். அதைவிட்டுப், போலீஸ் உண்டு, படை உண்டு, சிறை உண்டு, அடக்கிவிடுவோம், ஒரு துளியும் எதிர்ப்புணர்ச்சி தலைகாட்டாதபடி செய்துவிடுவோம், என்று கூறுவார்களானால், எந்தத் தலைவரின் உலா மிகச் சிறப்பாக, அனைவரும் கண்டு பெருமைப்படத்தக்க விதத்தில் நடைபெறவேண்டுமென்று அவர்கள் எதிர்பார்ப்பார்களோ, அம்முறையில், உலா அமையாது என்பது மட்டும், எனக்கும் தெரிகிறது, உனக்கும் புரிகிறது.

ஜனவரி ஆறும் நாள் நிகழ்ச்சி நினைவுக் குறிப்பில் இருக்குமானால், இங்குள்ள அமைச்சர்களும் அறிந்துதான் இருப்பார்கள்.

அன்று கையாண்டதைவிடக் கடுமையாக இருக்கும், கெடுபிடி என்று அமைச்சர்கள் கூறுவரேல், நாம் என்ன சொல்லமுடியும், அன்று வீழ்ந்த பிணத்தைவிட, இன்னும் சற்று அதிக அளவில் கீழேசாயும்! அது உமக்குச் சிறப்பளிக்கும் என்றால் செய்துகொள்ளுங்கள் என்றுதானே சொல்லமுடியும்.

பாபு பவனிவந்தார் ஊருக்கு நாலுவீதம், மொத்தத்தில் நாற்பது ஐம்பது பிணங்கள் கீழேசாய்ந்தன, தமிழகத்தில், என்று வரலாற்றிலே பதித்துக்கொள்வது, சிறப்புக்கும் அறிவுடைமைக்கும் அறநெறிக்கும் உகந்ததென்றால், ஆட்சியாளர், தமது இஷ்டப்படி செய்துகொள்ளட்டும்.

எதிர்ப்பு உணர்ச்சி காட்டாதிருந்தால், இந்திக்குத் தமிழகம் தலைசாய்த்துவிட்டது என்று பொருள்படும் என்று உணரும் தமிழர், அடக்குமுறைகளைக் கண்டு அஞ்சமாட்டார்கள்! பாபுவின் பவனி முறையுமல்ல; அவருக்குத் தேடித் தரவேண்டிய சிறப்பினையும் இங்குள்ள அமைச்சர்கள், பெற்றளிக்கத் தவறிவிட்டார்கள் என்ற பழிச்சொல்லே, பெறப்போகிறார்கள்.

அந்த வழிதான் எங்கள் வழி என்று அமைச்சர்கள் எண்ணினால், நாம் தடுக்கவா முடியும்!

நமக்கு நமது வழி தெளிவாகத் தெரிகிறது.

நமக்கு எத்துணை கஷ்டம் நேரிடுவதாயினும், தாயகத்துக்கு மானக்குறைவு, இனத்துக்கு இழிவு, மொழிக்குத் தாழ்நிலை, ஏற்படலாகாது, ஏற்பட விடக்கூடாது. அந்தத் தூய தொண்டாற்றவே, உயிர் நம்மிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

தமிழர், நீண்ட பல காலமாகவே அந்த வழி நடந்து பழகினவர்கள். அவர் வழிவழி வந்த நாம், வேறுவழியா நாடுவோம்!

"தவறான வழி செல்லாதீர்" என்று உருக்கமாகப் பேசும் பாவனையில் சிலரும்; "உங்களால் முடிந்ததைச் செய்யுங்கள்" என்று உருட்டுவிழி காட்டிச் சிலரும், பேசி வருகின்றனர்—காங்கிரஸ் வட்டாரத்தில்.

தமிழ்நாடு காங்கிரஸ் குழு மதுரையில் கூடி, இதைப்பற்றி விரிவாகப் பேசி—இந்தி எதிர்ப்பு அறப்போருக்கு ஆதரவு தராதீர் என்று, தமிழக மக்களைக் கேட்டுக் கொண்டிருக்கிறது.

தமிழர்கள், தங்கள் பக்கம்தான் நிற்பர், கழகத்தின் வேண்டுகோளை ஏற்கமாட்டார்கள், என்பதில் இந்த ஆண்மையாளர்களுக்கு நம்பிக்கை இருக்குமானால், ஒரு காரியம் செய்யச் சொல்லு பார்க்கலாம் தம்பி!

குடிஅரசுத் தலைவரின் ஆணைகண்டு குமுறிக் கிடக்கும் மக்கள், தங்கள் எதிர்ப்புணர்ச்சியை எடுத்துக்காட்ட, அவர் செல்லுமிடங்களில், அமைதியான முறையில். கருப்புக்கொடி காட்டவேண்டும், என்று கழகம், கூறிடட்டும்.

காமராஜரிலிருந்து கக்கன் ஈறாக, இன்னும் உள்ள நாராச நடையினர், அனைவரும் கூடி, தமிழக மக்களுக்குப் 'புத்திமதி' கூறி, கருப்புக்கொடி காட்டாதீர்கள் என்று வேண்டுகோள் விடட்டும்.

ஒருவர் முயற்சியில் மற்றொருவர் குறுக்கிட வேண்டாம்.

இருசாராரும், மக்களிடம் சென்று, நிலைமையை விளக்கித், தமது கருத்துக்கு ஆதரவு தேடட்டும்.

அப்போது, தமிழர்கள் கருப்புக்கொடி காட்டித் தமது கண்டனத்தைத் தெரிவிக்க முன் வருகிறார்களா, அல்லது காமராஜர் பேச்சைக் கேட்டு காலைக் கழுவி நீரைப் பருகிடும் பக்தர்போலாகி, குடிஅரசுத் தலைவரை வரவேற்கிறார்களா, என்று பார்ப்போம்.

இந்த அறைகூவலை ஏற்றுக்கொள்ள, அவர்கள் தயாரா?

அந்த இலட்சணத்தைத்தான், நேருவுக்குக் கருப்புக் கொடி காட்டியபோதே கண்டோமே!

தம்பி! மக்களைக் கண்டு, இன்னின்ன முறையில், அமைதிகெடாமல், பலாத்காரம் துளியும் தலைகாட்டா வண்ணம், கருப்புக் கொடி காட்டுங்கள் என்று கூறக், கடற்கரைக் கூட்டம் நடத்த அனுமதி கேட்டோம்—மறுத்தனர்—மீறிச் சென்றோம்—வழியிலே வளைத்துப் பிடித்துக்கொண்டுபோய்ப் போலீஸ் கொட்டடியில் போட்டு அடைத்தனர்.

அவ்வளவுதான், அவர்களுக்கு மக்களிடம் உள்ள நம்பிக்கை.

நமது மாநிலத்தில், மிக நீண்ட காலமாகவே, திறமையுடன் அமைந்துள்ள போலீஸ் படையின் தயவை நாடித்தான், காங்கிரசார் கிளர்ச்சிகளை ஒடுக்க முடிகிறதே தவிர, அறிவுரையாற்றி, மக்களைத் தம் பக்கம் ஈர்த்திட முடிகிறதா? இல்லை, தம்பி! இல்லை! அந்தச் சக்தியை அவர்கள் இழந்து நெடுங்காலமாகி விட்டது.

மெயில் இதழ்கூடக் காங்கிரசாருக்கு — அமைச்சர்கள் உட்பட—மக்களிடம் விளக்கம் கூறித், தம் பக்கம் கொண்டுவரச் செய்யும் ஆற்றல் இல்லை என்

பதை அறிந்துதான், கடுமையான தண்டனை கொடுத்து அடக்கவேண்டும், என்று எழுதுகிறது.

மக்களின் நெஞ்சைத்தொடும் விதமாகப் பேசும், மக்கள் தலைவரே! காமராஜரே! கிளம்புங்கள்! ஊரூர் சென்று, கழகத்தின் போக்கை மக்கள் ஆதரிக்கக் கூடாது என்று எடுத்துக் கூறுங்கள்—என்று எழுத மெயிலுக்கு மனம் வரவில்லை; நடவாத காரியமாயிற்றே என்று எண்ணுகிறது.

புள்ளி விவரப் புலியே! வாத வல்லுநரே! கோவைச் சிங்கமே! சுப்பிரமணியமெனும் அமைச்சர் ஏறே! போர் முழக்கம் செய்ய இன்றே புறப்படும்! உமது விவேகம் ததும்பும் பேச்சினைக் கேட்டால், மக்கள் தெளிவு பெறுவர்! உமக்மென்ன, சாரசாரமாகவா பேசத் தெரியாது! ஏதோ, இந்த நாடு செய்த 'தவப்பயனால்' 'அமைச்சர்' எனும் மிகச் சாதாரணப் பதவியில் இருக்கிறீர்—நீர் விரும்பினால், அகில உலக அரங்கின் அரியாசனம் அமர்ந்து பண்டிதரால் செய்து முடிக்க முடியாத பஞ்சசீலத்தைப் பாரில் வெற்றி பெறச் செய்ய இயலுமே! சில பயல்கள், பாபுவுக்குக் கருப்புக்கொடி பிடிக்கத் தூண்டினால் என்ன! உமது சங்கநாதம் கிளம்பினால், திக்கிலொருவராக ஓடிவிடமாட்டார்களா? மக்கள், உமது பாதம் பணிந்து கட்டளையை எதிர்பார்த்து நிற்கமாட்டார்களா! அத்தகைய பேராற்றல் படைத்தவரல்லவோ! இன்றேபுறப்படுக!'' என்று எழுதிட, மெயிலுக்குக் கூச்சமாக இருக்கிறது. கோவையார் போகாத ஊரில்லை, பேசாத நாளில்லை, மக்கள் கேட்டதாகத் தெரியவில்லையே; மறுபடியும் ஏன் வீண் முயற்சி என்று எண்ணுகிறது. எனவே தான், எது, அமைச்சர்களால், எளிதிலே செய்திட முடியுமோ, அதுவாகப்பார்த்து, கடுமையாகத் தண்டித்துக் கழகத்தை ஒழித்துக்கட்டுங்கள் என்று எழுதுகிறது.

மயில், காணும்போதுதான் தோகையை விரித்தாடினால், காட்சி அழகாக இருக்குமே, என்ற எண்ணம் தோன்றும். கழுகைக் காணும்போது? இதன் கூரிய மூக்கினால், பிணங்களை எத்தனை வேகமாகக் கொத்துமோ! என்று வியப்புடன் நினைத்திடத் தோன்றும்.

மக்களாட்சி முறையில், ஆளுங்கட்சி, எதிர்க்கட்சிகளின் பிரசாரத்தைத் தமது மறுப்புரைமூலம்பயனற்றதாக்கவேண்டும்; அந்த ஆற்றலுடன், அந்த ஆளுங்கட்சி இருந்தால். அத்தகைய ஆற்றல் அற்றுப் போனால்? பிடி! அடி! சுடு! இதுதான்!! இது புதிதுமல்ல; இதைக்கண்டு, மருண்டு, எந்த இயக்கமும் சுருண்டுபோனதில்லை. சிலர் மடிந்தனர்; வேறு பலர் எழுந்தனர்! சிலர் வாழ்வு பாழ்படுத்தப்பட்டது; ஆனால் இறுதியில், மனித குலத்துக்குப் புதுவாழ்வு கிடைத்தது.

*

நிதி அமைச்சர் பேசாமலும் இல்லை.

ஏன் வீண்பீதி?
இந்தியை எங்கே திணிக்கிறார்கள்?
தமிழன்றோ ஆட்சிமொழி ஆகி இருக்கிறது.
ஆங்கிலம் அறவே போய்விடாது.

என்றெல்லாம், பேசிவருகிறார்.

ஒருவிதத்திலே மகிழ்ச்சிதான் எனக்கு.
எவனவன் இந்தியை எதிர்ப்பவன்?
இந்திதான் நமது தேசிய மொழி.
இந்திதான் ஆட்சிமொழி.

தமிழ்மொழி, தாய்மொழி என்று பேசலாகாது.

தமிழர் வேறு இந்தியர் வேறு என்று கூறுவது மடைமை.

என்றெல்லாம் பேசவில்லை — பேச முடியவில்லை — பேசினால் இப்படியும் ஒரு தமிழ்த் துரோகி இருக்கிறாரே என்று பாமரரும் கூறிக் கண்டிப்பார்கள் என்ற பயம் மேலிட்டிருக்கிறது. தமிழ் இனம் விழிப்புற்று இருக்கிறது, என்பது தெரிந்து. சுடச்சுடப் பேசுவதுதான் சுவைமிக்கது என்ற கருத்தில் நாவைப் பயன்படுத்தும், அமைச்சர், அடக்க ஒடுக்கமாகப் பேசுகிறார். அந்த மாறுதல், வரவேற்கத்தக்கது; ஆனால், உண்மையையா, அவர் பேசுகிறார்?

தமிழ் ஆட்சி மொழியாக்கப்பட்டிருக்கிறது என்பதை மிகச் சிரமப்பட்டு விளக்கி இருக்கிறார்.

தமிழகத்தில் தமிழ் ஆட்சிமொழி ஆகி இருப்பது, அதிசயத்திலே ஒன்றல்ல.

மொழிவழி மாநில அமைப்பின்போதே, இப்படித்தான் நடந்திடும் என்பதை அனைவரும் அறிவர்.

தமிழ் மாநிலத்தில் தமிழ் ஆட்சிமொழி என்றிருப்பதுபோலவே, பிறமொழி பேசிடும் மாநிலங்களிலேயும் ஏற்பட்டுள்ளன.

இதிலே அமைச்சர் சுப்ரமணியனாரின் அலாதியான வீரதீரம் ஏதுமில்லை.

இது, டில்லியால் அனுமதிக்கப்பட்டுள்ள ஒரு ஏற்பாடு.

ஆனால், அமைச்சர் அறிவிக்காதது, ஆனால் நாடு அறிந்துகொள்ளவேண்டியது வேறொன்று உளது.

தமிழ் மாநில அரசு டில்லி அரசுக்குக் கட்டுப்பட்டு, அது இட்டவேலையைச் செய்துகிடக்கக் கட்டுப்பட்டிருக்கிறது.

எனவே ஆட்டிப்படைக்கும் அதிகாரம், டில்லிக்கு.

அந்தத் டில்லிக்கு, ஆட்சி மொழி இந்தி!

பேரரசு என்ற நிலைபெற்று உள்ள டில்லியில் எம்மொழி ஆட்சி மொழியோ, அந்த மொழியைத்தான் உலக நாடுகள், உண்மையான ஆட்சிமொழி என்று ஏற்றுக்கொள்ளும்—மதித்திடும்.

இந்த உண்மையை எடுத்துரைக்காது மறைத்துவிடுகிறார், அமைச்சர்.

வெளிநாடுகளுடன் செய்துகொள்ளும் ஒப்பந்த நடவடிக்கைகள், இந்தியா முழுவதுக்கும் (தமிழகம் உட்பட) என்று இயற்றப்படும் சட்டங்கள், உத்தரவுகள், எல்லாம் இந்தியில்தான்!

இந்தியப் பேரரசின் கட்டுக்கு அடங்கி நடக்கவேண்டிய இராணுவத்தில் இந்திமொழியில்தான், கவாத்து பழகுவதிலிருந்து, காரிய விளக்கங்கள் வரையில்.

இந்தியா முழுமைக்கும் என்று இருக்கிற உச்ச உயர் நீதிமன்ற நடவடிக்கைகள் இந்தி மொழியில்தான்.

இந்தியப் பேரரசு நடைபெறப் பணியாற்றி வரும் அலுவலகங்களிலே, உள்ளோர், இந்தி கற்றுத் தேறியாகவேண்டும்.

இவைகள், எதைக் காட்டுகின்றன? இந்தி, ஆட்சி மொழியாகிவிடுவதை, ஆதிக்க மொழியாகிவிடுவதை!

இந்தியப் பேரரசு, மாநில அரசுகளை, அதிகார மற்ற, தானம் கேட்டுப் பிழைத்திடவேண்டிய, தலை யாட்டிகளாக ஆக்கி வைத்திருப்பதைத், துணிவுடன் எடுத்தேன் கவிழ்த்தேன் என்று பேசிடும் போக்கின ராக உள்ள அமைச்சரேகூட, ஏற்றுக்கொண்டாக வேண்டிய பேறறிவாளர் பலரும் கூறிவிட்டனர்.

அந்தப் பேரரசு, இந்தியை ஆட்சிமொழி என்றாக்கிவிட்டால், இங்கு, தமிழ்தான் ஆட்சிமொழி என்று கதைப்பதிலே, பொருள் என்ன இருக்க முடியும்!

நீதிமன்றங்களில்கூட, இனித் தமிழ்தான் என்றார் அமைச்சர்.

யார் அவ்விதம் சொல்வது? உச்ச உயர் நீதிமன்ற நடவடிக்கைகள் இந்தியில் இருந்து தீரும். அந்நிலையில், ஒவ்வொரு மாநிலமும், தத்தமது தாய்மொழியில், உயர் நீதிமன்ற நடவடிக்கைகளை நடத்திச் சென்றால், குழப்ப மல்லவா ஏற்படும். எனவே மாநில உயர் நீதிமன்றங்களும், இந்தி மொழியிலேயே நடைபெறவேண்டும் என்று அறை கிறார், தில்லி அமைச்சர் சென்!

இப்போதும், உயர் நீதிமன்றம் தமிழில்தான் நடை பெறவேண்டும் என்பதில், சென்னைத் துரைத்தனம் உறுதியாக இருக்கிறது என்று பேசுகிறார் நீதி அமைச்சர்.

உரத்த குரலிற்கூடப் பேசலாம்—ஆனால் உறுதி யாக இருக்க இவருக்கு ஏது உரிமை?

உயர்நீதி மன்றங்கள் இப்படி இப்படி நடைபெற வேண்டுமென்று, தில்லி தீர்மானித்துவிட்டால், அதை மீறும் துணிவும், வழிவகையும், இவருக்கு ஏது?

இவரே அல்லவா, தமது ஆட்சியின் கீழுள்ள இந்த மாநிலத்தில், ஏதேனும் ஓர் இந்தியமொழி பயிலவேண்டும் என்று தந்திர மாகக் கூறிவிட்டு, எல்லாப் பள்ளிகளிலும் இந்தி யைத் திணித்திருக்கிறார்.

இவர், இந்தித் திணிப்பு இல்லை என்று பேசு வதை, எவர் மதித்திடுவர்.

இவைபற்றி எல்லாம் எண்ணிப்பார்த்தே மெயில், இந்த அமைச்சர்கள் பேசிப் பயனில்லை— இவர்களுக்குத்தெரிந்ததும், முடியக்கூடியதும் ஒன்றே ஒன்றுதான், ஈவு இரக்கமின்றி, எதிர்ப்பாளர்களை அடித்து நொறுக்குவது, அந்த வேலையைச் செய்யும் படி கூறலாம் என்ற போக்கிலே எழுதி இருக்கிறது.

கடுமையாகத் தண்டித்துவிடுவோம் என்று மிரட்டினால், குடிஅரசுத் தலைவரின் விழாவின்போது, எதிர்ப்புத் தலைகாட்டாது என்று எண்ணுகிறார்கள் போலும்!

ஆளுங் கட்சியினர், அவர்களை அடுத்துப்பிழைப் போர், ஆகியோரை அணிபணி பூண்டு வரச்செய்து, குடிஅரசுத் தலைவரின் முன்நிறுத்திக் காட்டி, "இதோ வரவேற்பாளர்கள்! தமிழர்கள்! தங்கள் ஆணையைச் சிரமேற்கொண்டு 'சேவை' செய்யக் காத்துக்கிடக்கும் கர்ம வீரர்கள்!" என்று, எடுத்துக் கூறுவர் போலும்!

தம்பி! முன்னமோர் நாள், ரோம் சாம்ராஜ்யத்தில் டைடஸ் ப்ளாவியஸ் டோமீஷியன் என்ற மன்னர் மன்னன் இருந்தான். வீரனல்ல; எனினும் விருதுகள் பெற விரும்பினான். இதோ வாய்ப்பு என்றனர், உடன் நின்றோர். ஜெர்மன் இனத்தவரின் ஆளுகையில் இருந்த ஒரு நாட்டின்மீது படை எடுத்துச் செல்லும் வாய்ப்புக் கிடைத்தது.

போர் நடைபெற்றது! ரோம்நாட்டு மக்கள், தமது மாமன்னன் பெற்றளிக்கப்போகும் வெற்றியை விழா வாகக் கொண்டாடத் துடித்து நின்றனர். போர் முடிவுற்றது. மாமன்னன், வெற்றி உலா வந்தான் ரோம் நகரில்! வீதிகளெல்லாம் வளைவுகள், கொடிகள் தோரணங்கள், மாமன்னரே, வருக! மாற்றானை மண்டி யிடவைத்த வீரரே வருக! ரோம் நாட்டுக் கீர்த்தியைப் பரப்பிய தலைவனே! வருக! வருக! என்று, வாழ்த்தி வரவேற்றனர்.

மாமன்னன், தலைநகரில் பவனி வந்தான்.

பிடிபட்ட ஜெர்மானியர்கள், அந்த ஊர்வலத் திலே, அணி அணியாக இழுத்துவரப்பட்டனர்.

ரோம் நாட்டு மக்களுக்குப் பேருவகை! தோற்ற வர்கள், பிடிபட்டனர், பிடிபட்டவர்களைப் பிடித் திழுத்து வருகிறார் மாமன்னர்!—என்று எக்காள மிட்டனர்.

ஆனால், தம்பி! உண்மையில் நடந்தது என்ன தெரியுமோ? போரிலே மாமன்னர் வெற்றிபெறவில்லை —விரட்டி அடிக்கப்பட்டார்.

தோற்றுப் போய்த்தான் தலைநகரம் திரும்பினார்.

ஆனால், வெட்கமாக இருக்குமல்லவா, அதனால், தோற்ற செய்தியை மூடி மறைத்தார் — வெற்றி உலாவே நடத்திக்காட்டினார்.

அங்ஙனமாயின், பிடிபட்ட ஜெர்மானியர்களைப் பிடித்திழுத்து வந்தாரே, அது எப்படி? என்றுதானே தம்பி! கேட்கிறாய்.

அவ்வளவுபேரும், மாமன்னரின் அடிமைகள்! அவர்களுக்கு, ஜெர்மானியர்போல் உடை அணிவித்து, அழைத்துவந்தார்— ஊரை ஏய்த்திட.

நாளை, குடிஅரசுத் தலைவர் முன் கொண்டுபோய் நிறுத்தப் படுபவர்கள், தமிழ் பேசுவோர், தமிழராகார்! தமிழரின் நடை உடை இருக்கும், நெஞ்சம் தமிழ் நெஞ்சமாக இராது! அடிமைகள் ஜெர்மன் உடையில்!! இவர்கள் அடிவருடிகள் தமிழர் கோலத்தில்!! பாபு இராஜேந்திரர், இந்தக் காட்சியைக் காணவா, தமிழகம் வர வேண்டும்! பரிதாபம்! மிகப்பரிதாபம்!!

அண்ணன்,

அண்ணாதுரை



# பொன்னித்தீவின் கன்னித்தெய்வம்

தப்புவதற்கு வழிபார்த்து நின்றிருந்த தேன்மொழி, வழியும் கண்ணீரையுந் துடைக்காது திலகவதியோடு ஓடினாள். இவர்கள் இருவரையுந் துரத்திக்கொண்டு வீரர்கள் சிலர் ஓடினர். பழக்கப்பட்ட அரண்மனையாயிற்றே அவளுக்கு. அகப்படவில்லை அவர்களிடம். தப்பிவிட்டனர் சுரங்கப்பாதை வழியாக.

நடைபெற்ற சண்டையின் விளைவாக வேழநாட்டு வேந்தனும் வேறு சிலரும் கைது செய்யப்பட்டனர். மணப்பெண்ணும், அவள் தகப்பனும் தப்பிவிட்டதையறிந்து மிகவும் ஆத்திரமடைந்தான் ஆலகாலன். தேடிப்பிடிக்கும்படி ஆணையிட்டான். ஆனால் இவன் ஆணையின் எல்லையை அவர்கள் தாண்டிவிட்டதை இவன் அறியான்.

தப்பிச்சென்ற திலகவதியும் தேன்மொழியும் காட்டுப்பாதைகளைக் கடந்து ஓர் பாழும் மண்டபம் வந்தடைந்தனர். இருவருமே களைத்துப்போயிருந்ததால், இளைப்பாற உட்கார்ந்தனர். வண்ணச் சிலையாக வளர்ந்திருக்கும் தன் மகளை இப்போதுதான் சரியாகப் பார்த்தாள். தேன்மொழியோ தன் எதிரில் இருக்கும் ஆடவளைப் பார்த்தாள்......ஒன்றும் புரியாது திகைத்தாள், அவள் திகைப்பில் திகில் கலந்திருக்கக் கண்டாள் திலகவதி.

"தேன்மொழி! பயப்படாதே, எவ்வளவு அழகாய் வளர்ந்திருக்கிறாய். மகளே.........பதினைந்து ஆண்டுகளாக உனைக் காணாது எவ்வளவு பாடுபட்டுவிட்டேன்.....என்னைப் பார்த்த நினைவு உனக்கு இருக்கிறதா?"

"நடந்ததெல்லாம் நினைத்தால் ஒரே குழப்பமாகவும் பயமாகவும் இருக்கிறது."

'நம் வாழ்க்கையே மிகவும் குழம்பிப்போயிருக்கிறது. மகளே......நான் யாரென்று உனக்குத் தெரியாது. தெரிந்தால் நீ ஆச்சரியப்படுவாய்.........இந்தப் பாவிதான் பத்துமாதம் உன்னைச் சுமந்து பெற்றவள்''

**ப. உ. சண்முகம்**

"என்ன?"

"ஆமாம். உலகோர் கண்களுக்கு ஆணாகக் காட்சி தரும் நான்தான் உன் தாய்!"

"தாயா?..."

"ஆமாமம்மா.......உன்னைப் பெற்றவள்தான்"

"நீங்கள் என் அம்மாவா?"

"ஆமாம் தேன்மொழி......உன் தாய்தான். நமது சோக வரலாற்றைப் பிறகு சொல்கிறேன். முதலில் நாம் அபாயத்தின் எல்லையைத் தாண்டியாகவேண்டும். நீ இந்தக் கோலத்தோடு இருப்பதே ஆபத்து. நகைகளையெல்லாம் கழட்டிவிடு. மாறுவேடம் போட்டாவது நாம தப்பியாக வேண்டும்."



தேன்மொழி நகைகளைக் கழட்டித் திலகவதியிடம் தந்தாள். அவைகளைப் பத்திரமாக முடிபோட்டு எடுத்துக்கொண்டாள்.

"தேன்மொழி......பொன் நகைகளைத்தான் என்னால் கழட்டமுடிந்தது; இயற்கை உன்மீது பூட்டியுள்ள எழில் நகைகள் உன்னைக் காட்டிக்கொடுத்துவிடும் போலிருக்கிறதே......வஞ்சகர்களின் வலையிலிருந்து தப்பவேண்டுமே......"

நெடுநேரம் யோசித்தாள். கடைசியாகத் தன் மகளைப் பைத்தியக்கார வேடமிட்டுத் தப்ப முடிவுகட்டினாள். தேன்மொழியை அலங்கோலமாக்கினாள்.

"யார் எது கேட்டாலும் பேசாதே. நான் பார்த்துக்கொள்கிறேன்" என்று மகளுக்குக்கூறி அழைத்துக்கொண்டு புறப்பட்டாள். காட்டைத் தாண்டிக் கொடி வழியாக நடந்துவந்தனர். தொலைவில் ஓர் சிறு கிராமம் தெரிந்தது. மெள்ள நடந்து கிராமத்தை நெருங்கினர். ஊருக்கு வெளியே ஓர் குடிசை, அதன் வெளியில் ஓர் கிழவி குந்தியிருந்தாள் குடிசை நோக்கி வரும் இவர்களை கிழவி பரிதாபத்தோடு பார்த்தாள்.

"பாட்டி......பசி அதிகமாயிருக்கு.........ஏதாவது........." என்றாள திலகவதி.

"ஐயோ......பாவம்......வாங்கோ உளளே" என றழைத்துச்சென்று தேனும், தினைமாவும் கொண்டு வந்து தந்தாள். இருவரும் உண்டனர்.

"நீங்கள் யாரு?......எந்த ஊரு?" என்றாள் பாட்டி.

"நாங்க வெளியூரு. இவ என் மகள்,........கொஞ்சம் பைத்தியம்,

எவ்வளவோ வைத்தியம் செய்து பார்த்தேன். முடியல்ல. கடைசியா இப்படிக் கோயில்குளம்னு அழைச்சிக்கிட்டுச் சுத்தரேன்.''

"ஐயோ......பாவம். இந்த பெண்ணுக்கா பைத்தியம்......உம்...... இப்படி எங்கே போறீங்கோ''

"கால்போன வழியெல்லாம் போறதுன்னு போறோம்''

"நான் சொல்றதைக் கேளு...... பொன்னித் தீவுன்னு ஒரு தீவு இருக்கு.........அங்கே 'கன்னித் தெய்வம்' என்று ஒரு தெய்வம் இருக்கு. அதுக்காக,பெரியகோயில் இருக்கு அங்கே அழைச்சிக்கிட்டுப் போ......அந்தத் தெய்வம் சக்தி வாய்ந்த தெய்வம்...உன் மகளுக்கு நல்லா ஆனாலும் ஆகும்.''

பாட்டி சொல்லிக்கொண்டிருக்கும்போதே குதிரைகளின் காலடி ஒலி கேட்டது. நடுங்கிப்போனாள் திலகவதி.

"பாட்டி......பாட்டி.......எங்களை நீதான் காப்பாத்தணும். என் பெண்ணை அவர்கள் பார்த்தா விடமாட்டாங்க. துரோகக் கூட்டம் வருது பாட்டி......எங்களைக் காப்பாத்து.....காப்பாத்து'' திலகவதி கண்ணீர்விட்டவாறே கிழவியின் கால்களைத் தொட்டாள்.

"நீ பயப்படாதே...நானிருக்கேன். நீ உன் மகளைப் படுக்கவைச்சுட்டுத் துணி போட்டு மூடிடு.'' என்று சொல்லி வெளியில் சென்றாள்.

வீரர்கள் சிலர் வந்தனர்.

"ஏய் கிழவி!......அழகா ஒரு பெண்ணும் ஒரு கிழவனும் இந்தப் பக்கமா வந்தாங்களா'' என்றான் ஒருவன்.

"இங்கே யாரும் வரலியே......... ஊரிலேபோய்க் கேட்டுப்பாரு''

"உள்ளே யார் இருக்கிறது.''

"என் மருமவ அம்மைவாத்துப் படுத்துகிட்டிருக்கா......என் மகன் உட்கார்ந்து அழுதுகிட்டிருக்கான்''

"டேய் போய்ப் பாருங்கடா'' என்றான். சிலர் இறங்கி உள்ளே போக வந்தனர்.

"அம்மா...அம்மா...பூட்டாளே.. ...பூட்டாளே'' என்று அலறி அழும் குரல் கேட்டது. கிழவி அலறி அடித்துக்கொண்டு உள்ளே வந்தாள். வீரர்கள் உள்ளே வந்தனர். கண்டனர். கிழவியும் அவள் மகனும் அலறி அடித்துக்கொள்ளும் காட்சியினைக் கண்டனர். திரும்பிப் போய்விட்டனர்.

வீரர்கள் சென்றுவிட்டதும், இனியும் இங்கே இருத்தல் ஆபத்து என்றுணர்ந்த திலகவதி கிழவிக்கு நன்றி தெரிவித்துவிட்டு இரண்டு பழம் புடவைகளைக்கேட்டு வாங்கித் தேன்மொழிக்கு உடுத்திக் கிராமியப் பெண்போல் வேடமிட்டுத் தானும் ஓர் புடவை உடுத்தினாள். பாட்டி ஆச்சரியத்தோடு பார்த்து நின்றாள்.

"என்னடி இது...... அதிசயமாயிருக்கே. பொம்பளையா நீ?''

"ஆமாம் பாட்டி. அவங்ககிட்ட அகப்படக்கூடாதென்பதற்காக அப்படி வந்தேன்.''

"ஆமாம்.....உங்களை ஏன் அவர்கள் தேடணும்?''

"இதோ இந்தப் பெண்ணைக் கொண்டு போறதுக்காக. பாவிப் பசங்க தொலைஞ்சுட்டானுங்கோ. எங்க உயிர் இருக்கிறவரைக்கும்



இந்த உதவியை நாங்க மறக்கவே மாட்டோம். நாங்க போய்வர்ரோம் பாட்டி.''

"எங்கே போறீங்கோ''

"இங்கேஇருந்தா ஆபத்துத்தான். எப்படியாவது தப்பிச்சிப் போயிடுறோம்''

புறப்பட்டனர் இருவரும். ஊருக்குள்சென்று வழிப்போக்கர் தங்கும் விடுதியைத் தேடிக் கண்டுபிடித்தனர். இவர்களைத் தேடி அலையும் வீரர்கள் அங்கும் வந்து தேடிச் சென்றனர். ஆனால் இவர்களை அவர்களால் அடையாளம் கண்டு கொள்ளமுடியவில்லை. இருவரும் அந்தச் சத்திரத்திலேயே தங்கினர்.

பொன்னித் தீவிற்குச் செல்லும் பிரயாணிகள் சிலர் அங்கு தங்கியிருந்தனர். அவர்களுடன் மெள்ளப் பேச்சுக்கொடுத்துத் தானும் பொன்னித் தீவிற்கு வருவதாகக் கூறினாள். அவர்களும் அழைத்துப்போகச் சம்மதித்தனர். மறுநாள் காலை அங்கிருந்து அவர்களுடன் புறப்பட்டாள். இவர்களை ஏற்றிச்சென்ற 'பாய்மரக்கலம்' புறப்பட்டது பொன்னித் தீவு நோக்கி. கலம் புறப்பட்டுக்கொஞ்சந் தூரம் கடலில் சென்ற பிறகுதான் திலகவதிக்குத் தைரியம் பிறந்தது. சோர்ந்திருந்த தன் மகளை மடியில் படுக்கவைத்துக்கொண்டே சென்றாள்!

## பொன்னித்தீவு

நான்கு புறமும் கடலால் சூழப்பட்டு, எத்திக்குத் திரும்பினாலும் பச்சைப்பட்டுப் பரப்பிவைத்தாற்போல் படர்ந்துள்ள வயல்களும், வழிந்தோடும் வாய்க்கால்களெல்லாம் துள்ளும் கயல்களும், காய்களைத் தாங்கி நிற்கும் தென்னை மரச் சாலைகளும், கனிகளைத் தந்திடும் சோலைகளும், அவைகளிடையே தோகை விரித்தாடும் கலாபமும் காணக் கண்கொள்ளாக் காட்சியாகும். உலாவுந் தென்றல் காற்றே சொல்லும் எவ்வளவு மணமுள்ள மலர்கள் அங்கு உள்ளன என்று. நஞ்சையும் புஞ்சையும் நிறைந்துள்ள இந்த நாட்டில் பஞ்சமே தலைகாட்டியது கிடையாது. சிரித்த முகங்களையும் சிங்காரித்த காட்சிகளையும்தான் இங்கே காணலாம். இன்ப வீடுபோல் உள்ள இது ஓர் நாடு!

இந்நாட்டின் வேந்தன் பொருளானந்தர் தன் மனைவி நந்தினியை மாளாத்துயருக்கு ஆளாக்கிவிட்டு மாண்டுவிட்டார். அன்றுமுதல் அரசை, அரசி நந்தினி ஏற்றாள்.

இந்நாட்டின் அமைச்சர் மச்சநாதன் அரசி நந்தினியைத் தன் பசப்பு வார்த்தைகளால் தன்வசப்படுத்தித் தன் சொல்லையே சட்டமாக்கி வந்தான். மச்சநாதனுக்கு உடந்தையாகப் பஞ்சகேசரி என்ற பண்டாரம் வந்து சேர்ந்தான். ஏற்கனவே பாவ — புண்ணியத்தில் தவறான நம்பிக்கை வைத்திருந்த அரசி நந்தினியை இவர்கள் இருவரும் நன்றாகப் பயன்படுத்தினார்கள். அரசிக்கு பக்தியைப் பெரும் அளவிற்குப்போதித்து வளர்த்தார்கள். மெள்ள மெள்ள பண்டாரம் பஞ்சகேசரி சாது பஞ்சநாதராகி அரண்மனைக் குருவானான். அரசியின் குரு என்று அறிந்த நாட்டு மக்கள் பெரும்மதிப்புத் தந்தனர்.

சாது பஞ்சநாதர், கன்னித்தெய்வத்திற்காக ஓர் ஆலயம் கட்ட வேண்டுமென்று அரசியிடம் யோசனை சொன்னான். அரசியின் இசைவு கிடைத்தது. வசூல் வேலைகளைத் தொடங்கினான். இவனுக்கு உடந்தையாக இருந்தான் மச்சநாதன். ஏராளமாகப் பொருள் குவிந்தது. கோயில் கட்டும் வேலை ஆரம்பமாகியது.

இதற்கிடையில் சாது பஞ்சநாதருக்குப் பருவமடைந்த மகள் ஒருத்தி இருப்பதை அறிந்து கொண்டான் மச்சநாதன். சாதுவையே விபரம் கேட்டான். பஞ்சநாதர் கெஞ்சிக் கேட்டுக்கொண்டார் வெளியில் சொல்லவேண்டாமென்று. இருவரும் சேர்ந்து அரசைக் கைப்பற்றுவதெனற முடிவிற்கு வந்தனர். அதற்கான சதி வேலைகளில் ஈடுபட்டனர் இருவரும்.

அரசிதான் தனக்கு வாரிசை நியமிக்கவேண்டுமென்று நாட்டில் நடைமுறைச் சட்டம் உளளதால் எப்படியாவது அரசியிடம் மச்சநாதன்தான் வாரிசு எனறு கையொப்பம் வாங்கிவிடுவதென்றும் பஞ்சநாதரின் மகள் 'வஞ்சி'யை மச்சநாதன் மணந்து கொண்டு இராணியாக்குவதென்றும், முடிவுகட்டினர். தங்கள் சதித் திட்டத்திற்குக் கன்னித்தெய்வ ஆலயத்தையே பயனபடுத்தவும் பேசி முடித்தனர்.

ஆலய வேலைகள் துரிதமாக நடைபெற்றன. ஆலயத்தினுள் கன்னித் தெய்வச் சிலை அமைக்கப் படும் அறையைச் சிலரை மட்டுமே வெளியில் விடாமல் வைத்துத் தந்திரமாக அமைத்தான் பஞ்சநாதன். வேலைகள் முடிந்ததும் அத்தனை ஆட்களையும் கொன்று விட்டான் மச்சநாதன. ஆலயத்தின் இரகசியம் வேறெவரும் அறியமுடியாதவாறு செய்து முடித்தான். ஆலயத்தின உள்ளேயே சாது பஞ்சநாதருக்கு தங்க வசதி செய்துக்கொடுக்கப்பட்டது. அவர் மகள் வஞ்சியு' உள்ளேயே எவரும் அறியாது தங்குவதற்கு ஏற்பாடுகளாயின. ஆலயம் கட்டி முடிக்கப்பட்டது. பின் கும்பாபிஷேகம் பெரும அளவில் நடைபெற்றது.



கன்னித்தெய்வத்தினை வலம் வராது அரசி ஆகாரம் கொள்வதில்லை என்ற நிலைமை வளர்ந்தது. கன்னித்தெய்வம் பற்றியும் அதன் மகிமைபற்றியும் நாடெங்கும் பேசப்பட்டன. காரணம் குருநாதரும் அமைச்சரும் செய்த பிரச்சார ஏற்பாடுகள்தான். பஞ்சநாதரின் பெருமை அதிகரித்தது. மச்சநாதன்—'வஞ்சி' தொடர்பும் வளர்ந்தது!

(தொடரும்)

THE SCHOOL OF ENGLISH LEARNING

# ஆங்கிலக் கல்வி நிலையம்

60, பிராட்வே, மண்ணடி, சென்னை-1.




**சிந்தித்துப் பதில் சொல்வீர்!**

**உழைப்பின்** மகிமையைப் பாரோர் பாராட்ட உதாரணமாய் நின்றிடும் **தாஜ்மஹால்,** செல்வத்தின் செழுப்பிலே மன்னன் ஷாஜஹான் எழுப்பிய மகோன்னத சின்னம்.

**அறிவின்** அருமை பெருமைகளுக்கு அணிகலனாக விளங்கிடும் காவியமாம் **இலியட்** வறுமையில் வாடிய, மாநிலம் புகழும் ஹோமரின் அற்புத சிருஷ்டி.

உழைப்பின் வாரா உறுதிகள் உளவோ?
உழைப்போடு அறிவும் சேர்ந்து விட்டால்,
ஆகா தேதும் உண்டோ?

*தமிழ் எழுதப் படிக்க தெரிந்தவர்கள்*

# ஒரே வருடத்தில்

ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தி அடிப்படையோடு இலக்கண ரீதியாக

## இங்கிலீஷ் தபால் மூலம் கற்கலாம்

**சேர கடைசி தேதி: 9—8—60 } பயிற்சிகள் ஆரம்பம்: 11—8—60**

ஆங்கிலத்தில் கருத்துக்களை அமைத்துச் சொந்தமாக எழுதவும் பேசவும் கட்டுரைகள் வரையவும் கடிதப் போக்கு வரத்துச் செய்யவும் முறையாக அடிப்படையோடு கற்பிக்கப்படும். சிறந்த முறையில் இலக்கணப் பயிற்சி அளிக்கப்படும்.

முக்கிய அறிவிப்பு:— (1) சேர விருப்பமுடையவர் கல்வி நிலையத்திலிருந்து அச்சிட்ட மனுவைப் பெற்றுப் பூர்த்தி செய்து உடனடியாக அனுப்பி வைக்க வேண்டும். (2) 16 வயதிற்கு மேற்பட்டவர்களே சேரத் தகுதியுடையவர்கள். (3) ஆதார பூர்வமான ஒப்பற்ற இலக்கணப் பயிற்சி அளிக்கப் படுவதால், ஓரளவு இங்கிலீஷ் தெரிந்தவர்களும் சேர்ந்து திருத்தமாகக் கற்றுத் தமக்குள்ள சந்தேகங்களைப் போக்கிக் கொள்ளலாம். (4) இங்கிலீஷ் ஓரளவு தெரிந்தவர்களுக்குத் தனியாகவும், எழுத்து முதல் ஒன்றுமே தெரியாதவர்களுக்குத் தனியாகவும் பயிற்சி யளிக்கப்படும். (5) இத் தபால் முறையில் படிக்க ஆண்களும் சேரலாம், பெண்களும் சேரலாம்.

**அச்சிட்ட மனுவையும் முழு விளக்கங்களையும் 8 தபால் பில்லை அனுப்பிப் பெறுக.**


காஞ்சீபுரம், 86, திருக்கச்சிநம்பி தெரு, "திராவிட நாடு" அச்சகத்தில்
ஆசிரியர் (உரிமையாளர்) சி. என். அண்ணாதுரையால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.